நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYA POOMI

පුදිය පුමි

சுற்று 06 டிசம்பர் 1999 பக்கம் 8 விலை ரூபா 10/= சுழற்சி 32



ஐக்கிய தேசியக் கட்சி - பொதுசன முன்னணி என்பனவற்றுக்கு எதிராக மூன்றாவது அரசியல் சக்தியை கட்டி எழுப்பி முன்னெடுக்க தோழர் வாசுதேவ நாணயக்காராவுக்கு வாக்களியுங்கள்!

X


## துணிவற்ற சிங்களத் தலைமைகளால் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது

இலங்கையின் இனப்பிரச்சினை சுதந்திரம் என்று கூறப்படும் காலத்திற்கு முன்பே ஆரம்பித்து விட்டது. ஆனால் சுதந்திரத்திற்குப் பின்பு இலங்கையில் உருவாகிய சிங்களத் தலைமைகள் எதுவும் அப்பிரச்சினையை நியாயமான வழிகளில் நேர்மையுடன் தீர்த்து வைப்பதற்கு துணிவுடன் முன்வர வில்லை. அவர்களது நேர்மையீன மான துணிவற்ற தலைமையினால் தான் நாடு இன்று இனப்பிரச்சினை சார்பான யுத்தத்தை அனுபவித்து வருகின்றது.

இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் வாசுதேவ நாணயக்காரா வெள்ளவத்தையில் இடம் பெற்ற பகிரங்க கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினார்.

மேலும் அவர் தனது உரையில் டி.எஸ். சேனநாயக்கா, ஜே.ஆர். போன்றவர்கள் இனப்பிரச்சினையின் மூலகர்த்தாக்கள். பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்து இனப்பிரச்சினை மற்றொரு கட்டத்திற்கு வளர்த்தார். ஆனால் அதே பண்டாரநாயக்கா இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பண்டா- செல்வா ஒப்பந்தத்தை செய்தார். அப்படிச் செய்த போதிலும் அவரது துணிவு அற்ற நிலையால் தானே உருவாக்கிய ஒப்பந்தத்தை தானே கிழித்து எறிந்தார். அவ்வாறே பின்பு டட்லி சேனநாயக்காவும் துணிவற்று நடந்து கொண்டார். அந்த வழியில் தான் சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்காவும் புலிகள் இயக்கத்துடன் நிதானமாகப் பேசுவதற்கு துணிவற்று ஆரம்பப் பேச்சுவார்த்தையில் இருந்து பினிவாங்கிக் கொண்டார்.

எனவே துணிவற்றதும் பிரச்சினைகளை நியாயமாகப் பேசித் தீர்ப்பதற்கும் தகுதியற்ற இரண்டு பெரும் கட்சிகளினால் யுத்தமாகி நிற்கும் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆதலினாலேயே சிங்கள மக்கள் மத்தியில் இருந்தும் தமிழ் முஸ்லிம் மலையக மக்களிடையே இருந்தும் நேர்மையும் துணிவும் மிக்க மூன்றாவது அரசியல் சக்தி


### சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சியே தீர்வுக்கு சிறந்த வழி.

### வாசுதேவ கூறுகிறார்.

ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். அதன் ஆரம்பமே ஜனநாயக இடது சாரி முன்னணியாகும். அதனைப் பலப்படுத்தி சக்தி பெறச் செய்வதற்கே அம் முன்னணி என்னை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியுள்ளது. எனவே நீங்கள் தேர்தலில் எனக்கு அளிக்கின்ற வாக்குகள் ஒவ்வொன்றும் மூன்றாவது அரசியல் சக்திக்கு வழங்கும் அங்கீகாரமாகும் என்றும் கூறினார்.

மேலும் இனப்பிரச்சினையின் இன்றைய யுத்த நிலை பற்றிக் குறிப்பிடுகையில் யுத்தம் உடன் நிறுத்தப்படல் வேண்டும். இயல்பு வாழ்வு தோன்றும் வகையில் உணவு மருந்து அத்தியாவசியப் பொருட்கள் வடக்கு கிழக்கிற்கு அனுப்பப்படல் வேண்டும். அதன் மூலம் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வரல் வேண்டும். ராணுவமும் புலிகளும் அவரவர் இருந்த இடங்களில் இருந்தபடியே யுத்த நிறுத்தத்தை மீறாத நிலையை உறுதிப்படுத்தி பேச்சு வார்த்தையை நடாத்துதல் வேண்டும். எனவும் எடுத்துக் கூறினார்.

மேலும் அவர் தனது உரையில் தான் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்ப்புக் குரலாகவும் கிளர்ச்சியாளனாகவும் இருந்து வந்துள்ளேன். அதற்கு அடிப்படைக் காரணம் நான் மக்களின் பக்கத்திலும் அவர்களது பிரச்சினைகளுடனும் இருந்து வந்தமையேயாகும். அதன்



காரணமாகவே பொதுசன ஐக்கிய முன்னணியை விட்டு வெளியேறி எதிர்க் கட்சிகளின் வரிசையில் அமர்ந்தேன். ஐந்து வருட ஆட்சிக்காலத்தில் நான் ஒரு போதும் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தது கிடையாது. அவ்வாறே தொழிலாளர் விரோதச் சட்டங்களுக்கோ அன்றி தமிழ் மக்களுக்க எதிராகவோ நடந்து கொண்டதும் கிடையாது. எனவே எனக்கு நாட்டின் சகல மக்களிடமும் சென்று துணிந்து உண்மைகளைக் கூறி வாக்குக் கேட்பதற்கு பூரண உரிமையும் கடமையும் உண்டு என்றும் கூறினார்.

## தமிழ்க் கட்சிகளின் அடிவருடித்தனம்

### அன்று முதல் இன்றுவரை தொடர்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் பொது வேட்பாளர் ஒரு வரை நிறுத்துவது பற்றி ஆரம்பத்தில் ஆரவாரம் செய்தன. அதற்கான பேச்சு வார்த்தைகளும் இடம் பெற்றன. குமார் பொன்னம்பலம் சுத்தமான தமிழன் என்ற பெயரோடு பொது வேட்பாளராக நிற்கவும் முன்வந்தார். பின்பு இந்தப் பொது வேட்பாளர் என்ற கதை மெல்ல மெல்லக் கரைந்து 'உந்தத் தேர்தலில் எனக்கு அக்கறை இல்லை' என்ற குமார் பொன்னம்பலத்தின் வாக்கு மூலத்தோடு முடிந்து விட்டது. சகல தமிழ்க் கட்சிகளும் ஒருமித்த முடிவுக்கு வரமுடியாமல் போன மைக்கு திரைமறைவில் காரணங்கள் இருக்கச் செய்தன. தமிழ்க் கட்சிகள் இரண்டு பேரினவாத முதலாளித் துவக் கட்சிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிக் கொள்வதற்கே பொது வேட்பாளர் கதையைக் கைவிட்டன.

இது அன்று பொன்னம்பலம் செல்வநாயகம் காலம் தொட்டு இன்றைய தமிழர் கட்சித் தலைமைகள் வரை பின்பற்றி வரும் வழிமுறையாகும். அதற்குக் காரணம் இனப் பற்றை விட வர்க்க பாசமே முதன்மையானதாகும். 'பகிஷ்கரிப்பு', 'அக்கறை இல்லை' இரண்டு கட்சிகளுக்கும் எதிர்ப்பு என்பதெல்லாம் வெறும் பம்மாத் தாகும். எப்படி யூஎன்பிக்கும், பொது சன முன்னணிக்கும் உதவலாம் என்பதே அவர்களது உள்ளார்ந்த விருப்பமாகும். அதன் வெளிப்பாடே மேற்கூறிய தமிழ்க் கட்சிகளின் முடிவாகும்.

முன்பு 1982ல் பேரினவாதியும் 77ல், 79ல் இனவன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டவருமான ஜே.ஆர். ஜனாதிபதித் தேர்தலில் நின்றார். குமார் பொன்னம்பலம் தனது தந்தை வழி நின்று யூஎன்பிக்கு உதவ நேரடியாகத் தேர்தலில் தமிழ் வேட்பாளர் என்ற பெயருடன் நின்றார். தமிழர் கூட்டணி அமிர்தலிங்கத்தின் தலைமையில் பகிஷ்கரிப்பு எனக் கூறி மறைமுகமாக யூ.என்.பிக்கு உதவி ஜே.ஆரை வெற்றி பெறச் செய்தனர். அந்த வெற்றியை அடுத்தே ஜே.ஆர். கச்சிதமாக 83 யூலை வன்செயலைக் கொடூரமாக முன்னெடுத்தார் என்பது வரலாறு. இந்த இரத்தம் தோய்ந்த வரலாற்றைத் தமிழ் மக்கள் மறந்து மீண்டும் யூ.என்.பிக்கு வாக்களிக்க வேண்டும் என ரெலோ என்ற தமிழ்க் கட்சி தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. இது உதைத்த காலுக்கு ஒத்தடம் கொடுத்து வருடிக் கொடுப்பது7 போன்றதாகும். இது ஆளும் வர்க்கத்திற்கான அடிமை விசுவாசத்தின் வெளிப்பாடு மாகும். ஈ.பி.டி.பியும் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும் பொதுசன முன்னணிக்கு ஆலவட்டம் பிடித்து தமிழ் மக்களிடம் வாக்கு கேட்கிறார்கள். தமிழர் கூட்டணி பழைய மாதிரியே நாடகம் ஆடுகிறது. அவ்வாறே ஆறுமுகம் தொண்டமான் பொதுசன முன்னணிக்கு நிற்க சந்திரசேகரன் யூஎன்பிக்கு தாவி உள்ளார். புளோட், ஈபிஆர்எல்எவ் என்பனவும் எதிர்ப்பு பகிஷ்கரிப்பு என்பன போன்ற பதங்களுடன் தங்களையும் ஏமாற்றி தமிழ் மக்களையும் ஏமாற்றி வருகின்றனர்.

எந்த ஒரு தமிழ்க் கட்சிக்காவது இரண்டு பேரினவாதக் கட்சிகளையும் எதிர்த்து மூன்றாவது அணியான ஜனநாயக இடதுசாரி முன்னணி வேட்பாளர் வாசுதேவ நாணயக் காராவிற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்ற துணிவான முடிவை எடுக்க முடியவில்லை. அதற்குக் காரணம் தமிழ் மக்கள் சார்பானவை அல்ல. ஒன்று வர்க்க நிலைப்பாடு. இரண்டாவது ஆட்சிக்கு வரக் கூடிய கட்சிகளில் ஒன்றிடம் சலுகைகளும் சுயலாபங்களும் பெறுவதற்காக காலடியில் நிற்பது தான். இவற்றைத் தமிழ்க் கட்சிகள் என்று இன்றைய போராட்டகாலத்தில் கூறுவதே அவமானமாகும். ஆனால் தமிழ் மக்கள் தமிழ்க் கட்சிகளின் அண்டிப் பிழைக்கும் முடிவுகளை உதாசீனம் செய்து விட்டு தமது எதிர்ப்புக் கண்டன வாக்குகளை வாசுதேவாவிற்கு வழங்கவே செய்வார்கள்.


## நாடு

பற்றிச் சிந்திக்கும்

## மனிதர்களின்

சிந்தனைக்கு......

✗ இனப்பிரச்சினைக்குத் தீர்வின்றி யுத்தம் நீடித்தால் ?
✗ நாட்டு வளங்களின் விற்பனை இவ்வாறு நீடித்தால் ?
✗ படுகொலை கும்பல்களுக்கான ஒத்துழைப்பு இவ்வாறு நீடித்தால் ?
✗ நீதித்துறையின் சுயாதீனம் இவ்வாறு சீரழிக்கப்பட்டால் ?
✗ பா.உ.க்களுக்கும் அமைச்சர்களுக்கும் பொதுமக்களின் செல்வம் இவ்வாறு விரயமானால் ?
✗ கலாசார சீரழிவு இவ்வாறு நீடித்தால் ?

### பிள்ளைகளுக்கு ஒரு நாடு எஞ்சுமா ?

✗ நாட்டின் பொருளாதாரத்தை உலக வங்கி முழுமையாகக் கட்டுப்படுத்தும் போது ?
✗ 17 ஆண்டுகள் நாட்டை சீரழித்த யு.என்.பி. சந்தர்ப்பவாதிகளை பொ. ஐ. முன்னணியில் சேர்க்கும் போது?

### யூ.என்.பிக்கும் – பொ.ஐ. முன்னணிக்கும் வித்தியாசம் என்ன ?

*நாம் இப்போதாவது பிள்ளைகளுக்கு ஒரு நாட்டை விட்டுவைக்கத் தலையிடுவோம்*

*வாசுதேவ நாணயக்கார*
ஜனாதிபதி வேட்பாளர்


ஜனநாயக இடதுசாரி முன்னணி

நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டமானின் மறைவும் ஆறுமுகத்தின் நிலையும்

திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் தனது 87வது வயதில் கடந்த ஒக்ரோபர் மாதம் 30ம் திகதி மரண மடைந்தார். நவம்பர் 4ம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அரச மரியாதைகளுடன் தகனம் செய்யப் பட்டார். அவ்வாறு செய்யப் பட்டமைக்கு அவர் அமைச்சராக இருந்தமை மட்டுமின்றி மேட்டுக் குடியைச் சேர்ந்த உயர் வர்க்கக் கனவானாகவும் திகழ்ந்ததுடன் அண்மித்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் மலையக மக்களை வளைத்தும் கொள்ளும் நோக்கிலுமே அத்தகைய அரச வைபவத் தகனம் நிகழ்த்தப்பட்டது.



மறைந்த தொண்டமான் மலையக மக்களின் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அடையாளமாகத் திகழ்ந்தார் என்பது மறுப்பதற்கு இல்லை. ஆனால் அந்த அடையாளத்தை மலையக மக்களின் அடிப்படை வாழ்வு மாற்றத்திற்கும் சுபீட்சத்திற்கும் எந்தளவுக்கு உறுதியாகச் செயல்பட்டார் என்பதே சிந்தனைக்குரியதாகும். ஒரு மறைந்த மனிதனுக்குரிய நிந்தனையாக இதனை எடுத்துக் கொள்ளாது எதிர் காலத்தின் மலையக மக்களுக்குரிய அரசியல் பாதையை தேர்ந் தெடுப்பதற்கு அது தேவையான ஒன்றாகும்.


தொண்டமான் இந்தியாவில் தமிழ் நாட்டில் நிலவுடமை ஆதிக்க வழி வந்த மாளிகை வாசியாகவே பிறந்தார். இலங்கைக்கு வந்த அவரது குடும்பம் மலையகத்திலும் மாளிகை வாசியாகவே வாழ்ந்தார். பின்பு கொழும்பிலும் தமிழகத்திலும் சொத்துக்கள் பெருக்கி இறுதிவரை மாளிகை வாழ்வு வாழ்ந்து மறைந்தார். அதுவே அவரது அரசியல் வாழ்வின் தரிசனத்திற்கு அடிப்படையானது. அதுவே அங்கீகாரம் பெற்ற தலைமத் துவத்திற்கும் அடையாளத்திற்கும் காரணமாகியது. இவ்வாறு கூறுவதன் மூலம் அவரது தொழிற்சங்க அரசியல் பங்களிப்பின் தன்மைகளை முற்று முழுதாக நிராகரித்து விடுவது என்பதல்ல பொருள். நாற்பதுகளில் ஆரம்பித்த இலங்கை இந்தியன் காங்கிரஸ் காலத்தி லிருந்து அவர் தொழிற் சங்கத் துறையில் தன்னை இணைத்து அதுவே இலங்கை தொழிலாளர் காங்கிரசாக மாறுவதற்கு தலைமை தாங்கியவர்களில் ஒருவராக இருந்தவர். அதன் தலைவராக உயர்ந்து சர்வ அதிகாரமும் அங்கீகாரமும் பெற்ற தொழிற்சங்க அரசியல் தலைவராக விளங்கினார். அவரது தலைமையில் குறிப்பிட்ட தொழிற்சங்க வேலைநிறுத்தப் போராட்டங்கள் இடம் பெற்றன. சில வெற்றி பெற்றன. சில இடைநடுவில் கைவிடப்பட்டன. கேட்ட சம்பள உயர்வு உட்பட முக்கிய கோரிக் கைகள் பெறப்பட்டாமலே பல போரா ட்டங்களை தொண்டமான் வாபஸ் பெற்ற வரலாற்றுச் சம்பவங்கள் உண்டு. அதனால் ஏனைய தொழிற்சங்கங்கள் அவரை காட்டிக் கொடுப்பாளன், முதலாளிகளுடன் சமரசம் செய்து தொழிலாளர்களுக்கு துரோகம் செய்தவர் என்று உரத்துக் கூறிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அவற்றில் உண்மைகள். உண்டு.


தொண்டமான் 60வருடங்கள் தொழிற் சங்க அரசியல் தலைவராகவும், 40 வருடங்கள் பாராளுமன்றத்தில் உறுப்பினராகவும் 22வருடங்கள் அமைச்சராகவும் இருந்து வந்துள்ளார். மலையக மக்களிடமிருந்து 1948ல் பறிக்கப்பட்ட பிரஜாவுரிமையை 1988ல் மீண்டும் பெற்றுக்கொடுத்தேன் என்று கூறக் கூடிய ஒன்றைத் (பிரஜாவுரிமை பெறப்பட்டமைக்கு தனியே தொண்டமான் உரிமை கொண்டாட முடியாது. அது பல்வேறு சக்திகளினதும் தொழிற் சங்கங்களினதும் இடதுசாரி ஜனநாயக கட்சிகளினதும் தொடர்ச்சி யான போராட்டங்களின் விளை வானது. குறிப்பானது அதனை வழங்கிய அன்றைய யூ.என்.பி. அரசாங்கத்தில் தொண்டமான் அமைச்சராக விளங்கிமைதான்) தவிர மலையக மக்களின் அடிப்படை ஜுவாதார உரிமைகளும் வாழ்க்கை மாற்றங்களும், முன் னேற்றங்களும் என்று பார்த்தால் அவற்றுக்கு தொண்டமானால் பெரிதாக எதையும் சாதித்துக் கொடுத்ததாகக் கூற முடியாது. தொண்டமான் தனது தொழிற்சங்கம், தனது குடும்பத் தலைமை, தனது உயர்வர்க்க அரசியல், தன்னைச் சார்ந்தவர்களின் வளர்ச்சிக்கு உதவியமை, தனக்குப் பின் தனது வாரிசின் நிலைப்பு போன்றவற்றுக்கு கொடுத்த முக்கியத்துவம் மலையக மக்களின் ஒட்டுமொத்த தேவைக்கும் வளர்ச்சிக்கும் அவர்களது இன்னல்கள் நிறைந்த வாழ்க்கை மாற்றத்திற்கும் வழங்கவில்லை. தொண்டமானின் இறுதிக் கிரிகை களை அரச வைபவமாக கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் செய்ய முடிந்தமை பற்றிப் பலர் பெருமை கொள்கின்றனர். அதேவேளை இன்றும் மலையகத்தில் மரணிக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பிணங்களை அடக்கம் செய்வதில் தடைகளும் இடையூறுகளும் அனுமதிமறுக்கும் நடைமுறைகளும் இருப்பதை இவ்வேளை சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகும். இது போன்ற பலவற்றைக் கூற இயலும். தொண்டமானின் தொழிற் சங்க அரசியல் தலைமைத்துவம் பற்றி விரிவான கண்ணோட்டம் எழுதப்படுவது அவசியம்.

தொண்டமானின் மறைவுடன் அவரால் ஏற்கனவே சிம்மாசனத்தில் அமர்த்தப் பயிற்றப்பட்டவரான அவரது பேரன் ஆறுமுகம் தொண்டமான் சகல தொழிற்சங்க அரசியல் பதவிகளில் ஆதிக்கம் பெற்ற தலைவராகி உள்ளார். அத்துடன் தாத்தாவின் அமைச் சையும் பெற்றுள்ளார். தாத்தாவின் வழியில் செல்வேன் என்ற உறுதி மொழியையும் பெற்றுள்ளார் ஆறுமுகம் மலையக மக்களின் அங்கீகாரத்தையும் தரிசனத்தையும் கொண்ட சக்தி மிக்க மலையகத் தலைவர் என்று பெயர் சூட்டப்பட்டு வந்த தொண்டமானால் அறுபது ஆண்டுகளாக செய்ய முடியாத வற்றை எவ்வாறு அவரது பேரன் ஆறுமுகம் தொண்டமானிடம் மலையக மக்கள் எதிர்பார்க்க முடியும். தலைவர்கள் என்ற பெயரில் வந்து தரிசனம் காட்டி நிற்கும் தனி மனிதர்களால் ஒரு ஒடுக்கப்படும் சமூகம் விடுதலையோ அடிப்படை மாற்றமோ பெற முடியாது. அத்தகைய மக்கள் சமூகம் தமது தலைவிதியை மாற்றும் தலைமை த்துவத்தையும் அரசியல் மார்க்கத் தையும் தங்கள் மத்தியில் இருந்தே தோற்றுவித்தல் வேண்டும். தொண்ட மானிடம் அறுபது ஆண்டுகளாக மலையக மக்கள் எதிர்பார்த்து நின்று காலத்தை வீணாக்கியதைப் போன்று பேரன் ஆறுமுகத்திடமும் எதிர்பார்த்து நின்று காலத்தைக் கரைத்து வீணாக்காது மலையக மக்கள் தமக்குரிய புதிய திசையில் புதிய பாதையில் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். தொண்டமானின் மறைவு அதற்குரிய தொடக்கமாக அமைதல் வேண்டும்.

ப. சுந்தரேசன்


விற்பனையாகிறது




South Asian Books
44, 3rd Floor,
CCSM Complex,
Colombo - 11.


## நாலு நடக்கும் உலகிலே

### மூன்றாம் தரப்பு வரமுதல் யுத்தத்தை நிறுத்த முடியாதா?

அவர்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வேண்டும் என்றால் இவர்கள் வேண்டாம் என்பார்கள். இவர்கள் வேண்டும் என்றால் அவர்கள் வேண்டாம் என்பார்கள். இது தென்னிலங்கையின் பேரினவாத அரசியல் விளையாட்டு. இன்று விடுதலைப் புலிகள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு உடன்படுவது போலுள்ளதால் அதுவே தேசிய இனப்பிரச்சினையின் மையமாக நமது தமிழ் ஏடுகளாற் காட்டப்படுகிறது.

நம் முன்னுள்ள பிரதான விவாதம் அது தானா? யாருடைய மத்தியஸ்தம் என்பது ஒரு கேள்வி. எந்த அடிப்படையிலான மத்தியஸ்தம் என்பது இன்னொரு கேள்வி. எதற்கான மத்தியஸ்தம் என்பது வேறொரு கேள்வி. இன்று அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சிங்களத் தேசியவாதிகளும் ஒரு தீர்வை விரும்பினால் முதலில் அது பற்றிய ஒரு அடிப்படையான பொது நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இல்லாமல் அது முடியாது என்றால், அது மூன்றாம் தரப்பு நிர்ப்பந்தமில்லாமல் முடியாது என்று சொல்வது போன்றதாகும். கடந்த பதினைந்து வருடமாக உலகின் மூன்றாம் தரப்பு நிர்ப்பந்தம் ஒவ்வொரு தேசிய இனப்பிரச்சினையிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எவ்வளவு பேரழிவை ஏற்படுத்தியுள்ளது என்பது பற்றி நமக்கு ஒரு தெளிவு வேண்டாமா?

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை விட நிலைக்கக் கூடியதும் பயனுள்ளதும் போர் நிறுத்தத்திற்கான வெகுசன முயற்சிகளே. போரின் விளைவுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லப் பரந்துபட்ட வெகுசனப் பிரசார இயக்கங்கள் தேவை. இந்தக்கடமையைச் சகல முற்போக்குச் சக்திகளும் மும்முரமாக முன்னெடுக்க வேண்டாமா?

### வீரவிதானவின் இலக்கு யார்?

தமிழர்கட்கும் விடுதலைப் புலிகட்கும் எதிரான கோஷங்களை வெளிவெளியாக எழுப்பிவரும் வீரவிதான இயக்கத்தின் பிரதான நடைமுறை என்னவோ சிங்கள வர்த்தகர்களின் நலன்களைப் பேணுவதுதான். முஸ்லிம் வியாபாரிகளை ஒரங்கட்டுவதற்காக இவர்கள் திட்டமிட்ட முறையில் மேற்கொண்டுவரும் செயல்கள் பற்றி அதிக இரகசியம் இல்லை. அடுத்த இலக்கு மலையகத் தமிழ்த் தேசிய இனமாகவும் குறிப்பாக வர்த்தகர்களாகவும் அமைவது பற்றியும் சாடைகள் தெரிகின்றன. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் நடந்த சிங்கள–முஸ்லிம் கலவரத்தின் அடிப்படை வியாபாரப் போட்டி என்பதை நினைவிற் கொண்டால், அன்றைய தமிழ்த் தலைமை செய்த தவறுகளை இன்றைய தமிழ்த் தேசியவாதிகளும் செய்யாமல் இருப்பார்களா என்ற கவலையும் ஏற்பட இடமுள்ளது.

### வடக்கு மறக்கப்பட்ட முஸ்லிம்கள்

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டு ஒன்பது ஆண்டுகளாகிவிட்டன. அவர்களை மீளக்குடியேற்றுவது பற்றிச் சிலகாலம் நிறையப் பேசப்பட்டது. இப்போது அது பற்றிய அக்கறை எந்த தேசியவாத அரசியல் தலைமைக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

அதேவேளை, வடமேல் மாகாணத்தில் அகதிகளாகச் செறிவாக, வாழும் இந்த அல்லற்பட்ட மக்களை ஒரு 'வாக்கு வங்கி' யாகப் பாவிக்கும் நோக்கில் அவர்களை நிரந்தரமாகவே புத்தளத்தைச் சூழஉள்ள பிரதேசத்தில் குடியமர்த்தும் நோக்கம் சில முஸ்லிம் அரசியற் தலைமைகளிடம் உள்ளது. இவர்களது குறுகிய கால லாபத்திற்காக வட பிரதேச முஸ்லிம்களது பாரம்பரிய உரிமை பறி போவது நல்லதல்ல. இதுபற்றித் தமிழ்த் தேசியவாதிகளின் மெத்தமான போக்கு கண்டனத்துக்குரியதாகும். மறுபுறம் இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் தலைமைகள், தங்களை இன்றைய அரசியற் பேரங்களுக்குள் ஈடுபடுத்தி வடமாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றிய நீண்டகால நோக்கைக் கைவிடுவது பற்றியும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### இந்தியத் தேர்தலும் ஈழத் தமிழ் தேசியமும்

பாரதிய ஜனதா கட்சியின் வெற்றி பல ஈழத் தமிழ்த் தேசியவாதிகட்குக் கிளுகிளுப்பூட்டியுள்ளது. இதே கட்சியின் கடந்த கால ஆட்சியின் போது விடுதலைப்புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டதை இவர்கள் மறந்துவிட்டனர். பா.ஜ.க. ஆட்சி அமெரிக்காவுக்கு நேசக்கரம் நீட்டுவதையும் இவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. பா.ஜ.க. ஆட்சியில் பங்காளியாக இருந்த கோபாலசாமியும் ராமதாசும் ஈழத்தமிழர்கட்காக எதையும் செய்விக்க முடியவில்லை. முன்பு ஈழத்தமிழர்களைக் காட்டிக் கொடுத்ததாகக் குற்றங்கூறப்பட்ட கருணாநிதியின் மருமகன் மாறன் அமைச்சராகியுள்ளார். இன்னமும் இந்திய ஆளும் வர்க்கத்தின் தயவில் ஈழத்தமிழர்களின் எதிர்காலக் கனவுக் கோட்டைகளை நாம் கட்டியெழுப்பப் போகிறோமா?

### கோபாலசாமியும் தமிழ் ஈழமும்

கடந்த இரண்டு வருடகாலங்களை ஜெயலலிதாவோடு நெருக்கமாக இருந்த காலத்தில் ஈழத் தமிழர் பற்றி அதிகம் பேசாத வை. கோபாலசாமி இப்போது பழையபடி தமிழ் ஈழம் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டார். லண்டனில் உள்ள, விடுதலைப்புலிகட்குச் சார்பாக ஒரு வானொலி நிலையத்துக்கு அளித்த நேர்காணலில் தன் செயலின்மைக்குத் தமிழகத்து அரசியல் சூழல் மீது பழிசுமத்தியதேடு ராஜுவ் காந்தி கொலைக்காக நால்வர் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனை விமர்சனத்துக்குரியது என்றும் கூறியுள்ளார்.

இவ்வளவும் பேசுகிற கோபாலசாமி, கடந்த எட்டு வருடகாலமாகச் செய்து வந்தது என்ன? தமிழகத்தின் வாக்காளர்களது மனநிலையை ஆழம் பார்த்தே அரசியல் நடத்துகிற திராவிட இயக்கங்கள் ஈழத் தமிழர் பிரச்சினை பற்றி எதுவும் செய்யும் என்று எவரும் விரும்பலாம். ஆனால் அதை நம்பி இருப்பது தான் முட்டாள்தனம்.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

PUTHIYA POOMI புதிய பூமி

S-47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக்கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844


## மூன்றாவது அரசியல் சக்தி !

நாட்டின் ஜனாதிபதித் தேர்தலும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறலாம். இருபெரும் ஆளும் வர்க்க கட்சிகளில் ஒன்று அதிகாரத்திற்கும் வரலாம். அதுவே நாட்டின் பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வு ஆகி விடப்போவதில்லை. ஏனெனில் நாடு எதிர் நோக்கியுள்ள பூதாகரமான பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய வல்லமையும் ஆற்றலும் அவ் இரு கட்சிகளுக்கும் இல்லை. காரணம் அவை அடிப்படையில் சொத்து சுகம் பெற்ற உயர் ஆளும் வர்க்கங்களினதும். அந்நிய சக்திகளினதும் தேவைகளையே அவ்விரு கட்சிகளும் பிரதிநிதித்துவம் செய்து நிற்கின்றன.

இந்நிலையில் மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றின் அவசியம் தற்போது சகல தரப்பிலும் உணரப்படுகின்றது. இத்தகைய மூன்றாவது அரசியல் சக்தியை வேறொரு வடிவத்தில் வலதுசாரி சக்திகளிடையே தோற்றுவிப்பதற்கும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. அதேவேளை இடதுசாரி ஜனநாயக சக்திகள் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றினை உருவாக்குவதில் பல்வேறு முயற்சிகளைச் செய்து வருகின்றனர். ஆனால் இடதுசாரிகள் மத்தியில் அரசியல் தத்துவார்த்தப் பிளவுகளும் தனிக்கட்சி அதிகார மமதைகளும் முன்னெழுந்து நிற்பதால் ஒன்று பட முடியாது திணற வேண்டியுள்ளது.

இலங்கையின் இடதுசாரி இயக்கம் சாதனைகளைப் புரிந்த போதிலும் காலத்திற்குக் காலம் விட்ட பாரிய தவறுகளும் பாராளுமன்றவாத சந்தர்ப்பவாத சேற்றினுள் மாட்டிக் கொண்டமையும் மட்டுமின்றி அதிதீவிரவாத செயற்பாடுகளும் அவ் வியக்கத்தைப் பலவீனப்படுத்திக் கொண்டன.

இவற்றின் கடந்தகாலப் பட்டறிவும் அனுபவங்களும் இடதுசாரி இயக்கத்தை புதிய திசையில் பயணிக்கச் செய்தல் வேண்டும். நாட்டில் மூன்றாவது அரசியல் சக்தி நிச்சயம் இடதுசாரி ஜனநாயக சக்திகள் மத்தியில் இருந்தே தோன்றுதல் வேண்டும். அத்தகைய மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சக்திகள் ஒன்றிணைந்து முன்வைக்கக் கூடிய ஒரு தேசிய ஜனநாயக வேலைத் திட்டமே பூதாகரமாகி நிற்கும் பிரச்சினைகளுக்கு உரிய பரிகாரத்தை வழங்க முடியும்.

நாட்டின் இன்றைய அரசியல் யதார்த்தத்தையும் மக்களின் தேவைகளையும் எதிர்காலத்தையும் உரியவாறு சரியான மார்க்சிச இடதுசாரிப் பார்வைக்கு உட்படுத்தல் வேண்டும். மார்க்சிசத்தை வெறும் வரட்டுத்தனமாக உச்சரித்துக் கொண்டு நாம் மட்டுமே இடதுசாரிகள் ஏனையவர்கள் எவருமே இடதுசாரிகள் அல்லர் என்ற நிலைப்பாடு மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் விரோதமானதாகும்.

இடதுசாரிகள் அடிப்படையில் மாக்சிசத்தை ஏற்றுக் கொண்ட போதிலும் நடைமுறையில் பல்வேறு கொள்கை தத்துவார்த்தத் தளங்களில் இருந்து வேலை செய்து வருகிறார்கள். அதே போன்று ஜனநாயக சக்திகளும் பரவலாகக் காணப்படுகின்றன. ஆனால் இத்தகைய இடதுசாரி ஜனநாயக சக்திகளை ஒரு தேசிய ஜனநாயக வேலைத் திட்டத்தின் கீழ் ஒன்றிணைத்துச் செல்லக் கூடிய சூழலைத் தோற்றுவிப்பது இன்றைய அவசியத் தேவையாகும்.

அத்தகைய பொது வேலைத்திட்டத்தில் பூகோளமயதாலின் கீழ் நாட்டின் பொருளாதாரத்தை பல்தேசியக் கம்பனிகளின் கோரப்பிடியில் இருந்து பாதுகாப்பது என்பது தெளிவாக்கப்படுவது அவசியம். தேசிய பொருளாதாரத்திற்கான சரியான திசை காட்டப்படல் வேண்டும். அதேவேளை நாட்டின் பிரதான பிரச்சினையாகி யுத்தமாகி நிற்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வுக்குரிய அம்சங்கள் முன் வைக்கப்படல் வேண்டும்.

மேலும் நாட்டின் அனைத்து மக்களினதும் அபிலாசைகளை உள்ளடக்கியதாகவும் அவற்றை வென்றெடுப்பதாயும் இம் மூன்றாவது சக்திக்கு உரிய வேலைத்திட்டம் அமைதல் வேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்பும் இனவாத எதிர்ப்பும் தேசிய இனங்களின் சமத்துவமும் ஒற்றுமையும் உள்ளடக்கப்பட்டு முன்னெடுத்தல் வேண்டும். இத்தகைய மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றிற்கான தேவையை உணர்ந்து நேர்மையான இடதுசாரி ஜனநாயக புரட்சிகர சக்திகள் செயல்படுவது இன்றைய காலத்தின் கட்டாயமாகின்றது. இதற்கான முயற்சிகள் மீண்டும் மீண்டும் பின்னடைவு கண்டபோதிலும் அதனை வெற்றி பெறச் செய்வதில் சாதனையாக்கி நிலை நாட்டுவதில் சளைக்காது தொடர்ந்தும் முன்செல்லல் வேண்டும்.

-ஆசிரியர் குழு-

# ஆட்சி அதிகாரப் போட்டியில் சந்திரிகா-ரணில்

- வெகுஜனன் -

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகுவதற்கு தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவும் எதிர்க்கட்சித் தலைவரான ரணிலும் கடும் போட்டியில் இறங்கி நிற்கின்றனர். நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மக்கள் விருப்பத்தின் மீது நடைபெறும் ஒரு தேர்தல் அல்ல. ஆட்சி அதிகாரத்தை தொடர்ந்தும் தமது கரங்களில் வைத்திருப்பதற்கு சந்திரிகாவும் அவரைச் சுற்றி இருப்பவர்களும் மக்கள் மீது திணித்துள்ள ஒரு தேர்தலாகும். காக்கி உடையிணிந்த ராணுவ சர்வாதிகாரத்திற்குப் பதிலாக சாதாரண ஆடை உடுத்திய தனிநபர் சர்வாதிகாரம் நடாத்துவதற்கு மக்களிடம் ஆணை கேட்கும் ஒரு தேர்தலாகும்.

இத் தேர்தலில் நிற்கும் சந்திரிகா அம்மையாகும் ரணிலும் தத்தமது கட்சிகளின் சார்பாக முன் வைத்திருக்கும் வேலைத்திட்டம் இவர்கள் யாரின் பிரதிநிதிகளாகத் தேர்தலில் நிற்கிறார்கள் என்பதை நன்கு புலப்படுத்தும். நாடும் மக்களும் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கடந்த 22வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுசன ஐக்கிய முன்னணியும் தொடர்ச்சியாக ஆட்சி அதிகாரம் செய்து வந்ததன் மூலம் நாடு நாசமாக்கப்பட்டது. 1994ம் ஆண்டு சந்திரிகா பல வாக்குறுதிகளோடு பதவிக்கு வந்தபோது குறைந்த பட்சமான தீர்வுகளும் மாற்றங்களும் ஏற்படும் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் சந்திரிகாவும் பொதுசன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாதையில் எவ்வித திருப்பமும் இன்றிப் பயணம் செய்து கொண்டது.

யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு என்பன புறம் தள்ளப்பட்டது. சமாதானத்திற்கான யுத்தம் என்னும் பெயரில் யுத்தம் கொடூரமாக முன்னெடுக்கப்பட்டது. ராணுவமும் ஆயுதப்படைகளும் நவீன ஆயுத தளபாடங்களுடன் விஸ்தரிக்கப்பட்டன. அமெரிக்காவின் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் பெறப்பட்டன. மனித வளங்களும் செல்வ வளங்களும் யுத்தத்திற்கு இரையாக்கப்பட்டன. அதேவேளை தாராள பொருளாதார கொள்கை விஸ்தரிப்பின் கீழ் தனியார் மயம் வேகமாக்கப்பட்டது. ஜனநாயகமும் மனித உரிமைகளும் வெவ்வேறு தளங்களில் புதிய வழிகளில் மீறப்பட்டன. வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு நாளாந்தம் பெருகின. வரிகள் அதிகரிக்கப் பட்டன. குறிப்பாக பொருட்கள் சேவைகள் வரி, பாதுகாப்பு வரிகள் மூலம் மக்கள் அமுக்கப்பட்டனர். மலையகத்தின் பெரும் தோட்டம் பொருளாதாரம் தனியார் கைகளில் சென்றதின் பின்பு தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை மேன்மேலும் மோசமடைந்தன. சம்பளம் முதல் வேலை நாள் வரையான கெடுபிடிகள் கூடிக் கொண்டன. அதே வேளை நாட்டின் சமூக கலாச்சாரத் துறைகளில் என்றுமில்லாதவாறு போதைப் பொருட்பாவனை, பாலியல் துர் நடத்தைகள், தற்கொலைகள், பாதாள உலகத்தவர்களது வளர்ச்சி, ஆபாச படங்கள் சஞ்சிகைகளின் பெருக்கம் என்பன முன்புஇல்லாதவாறு வளர்ச்சியடைந்துள்ளன. இவை அனைத்தும் உலகமயமாதல் நிகழ்ச்சிநிரலின் தேவைகளை ஒட்டியதாகவே பெருகுவதற்கு வழி ஏற்படுத்தப்பட்டது.

> யார் கையில் அதிகாரம்
> யார் ஆளப்படுவோர்!
> யார் கையில் துப்பாக்கி
> யார் சுட்டுச்சாவோர்

இத்தகைய அவலங்களை மாற்றக் கூடிய ஒரு வேலைத்திட்டத்தை சந்திரிகா ரணில் ஆகிய இருவரது தேர்தல் பரப்புரைகளில் காணவில்லை. ஒருவரை ஒருவர் திட்டித் கொள்கிறார்களே தவிர உருப்படியான பொருளாதார அரசியல் சமூக கலாச்சார மாற்றத்திற்கோ அன்றி குறைந்த பட்சத் சீர்திருத்தம் செய்வதற்கோ கூட எதுவும் முன்வைப்பதாக இல்லை. முன்பு ஜனாதிபதி முறையை மாற்றுவேன் என்று கூறிய சந்திரிகா இன்று அதனைக் கைவிட்டுவிட்டார். காரணம் அந்த சர்வாதிகார முறையினால் தான் யுத்தத்தை நடாத்தவும் தொடர்ந்து தனியார் மயத்தைச் செய்யவும் முடியும் என்பதால் ஆகும். ரணிலும் தனது தேர்தல் வாக்குறுதியில் அரசியலமைப்பையும் ஜனாதிபதி முறைமையையும் மாற்றப் போவதில்லை என்றே கூறுகிறார். அவர் விசேடமாகக் கூறுவது புலிகளுடன் பேசுவேன் தீர்வைக் கொண்டு வருவேன் என்பதாகும். இப்படித் தான் முன்பு சந்திரிகா கூறினார். ரணில் இப்போது கூறுவதை விடப் பலமடங்கு வாக்குறுதிகளை முன்வைத்தார். எனவே புலிகளுடன் பேசுவேன் என்ற வாக்குறுதி இன்று பழங்கதை மட்டுமல்ல ஏமாற்றத்தனமான வெற்றுக்கோஷமாகும்.

இந்நிலையில் புலிகளை மையமாக வைத்து இனவாதத்தை மறைமுகமாக கிளறி அதன் மூலம் மக்களிடமிருந்து வாக்குகள் பெற இருவரும் முயல்கிறார்களே தவிர நேர்மையாக ஒரு புதிய வேலைத்திட்டத்தையோ அல்லது வாக்குறுதியையோ முன்வைக்க வில்லை. அவர்கள் இருவரினதும் வேலைத்திட்டம் சாராம்சத்தில் ஒன்றே தான். அதனை நிறைவேற்றுவது நானா? நீயா? என்றே போட்டி போடுகிறார்கள். இதனையே இடதுசாரி ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான வாசுதேவ நாணயக்கார 'பாடத்திட்டம் ஒன்று ஆசிரியர்கள் இரண்டு' என விபரித்தார். ஒரே பாடத்திட்டத்தை எந்த ஆசிரியர் நடத்துவது என்பதே ரணில் சந்திரிகாவிற்விடையிலான போட்டியாகும். பாராளுமன்ற ஆட்சிமுறை வந்து 52 ஆண்டுகள். சுதந்திரம் கிடைத்து 51 ஆண்டுகள். சர்வாதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை வந்து 21 ஆண்டுகள். இவ்வளவு காலத்தில் இந்த நாடு எதனை தனது சாதனையாக, அறுவடையாகப் பெற்றுக் கொண்டது. ஒரு முறை திரும்பிப் பார்த்து உற்று நோக்கினால் யுத்தமும் உயிர் அழிவுகளும் இடப் பெயர்வுகளும் அகதிவாழ்வு சொத்து அழிவுகள் ஒருபுறம். மறுபுறம் அரச பயங்கரவாதக் கொலைகள் வேலை இன்மை வறுமை வாழ்க்கைச் சுமைகள்.

இவற்றை சந்திரிகாவோ ரணிலோ ஜனாதிபதி ஆகுவதன் மூலம் தீர்க்க இயலாது. மூன்றாவது அரசியல் சக்தி ஒன்று முன்னெழுந்து சக்தி பெற வேண்டும். மக்கள் லட்சோப லட்சமாகப் பங்கு ஏற்று போராட்டப் புயலில் இறங்க வேண்டும். ஆளும் அதிகார சக்திகளை அடித்து வீழ்த்த வேண்டும். அதன் மூலமே நாட்டைப் பிடித்து நிற்கும் சகல பீடைகளையும் துடைத்தெறிந்து விட்டு மக்கள் அதிகாரத்தை நிறுத்த முடியும். அத்தகைய இலக்கை நோக்கி வீறு நடைபோடுவதே இடதுசாரி ஜனநாயக புரட்சிகர சக்திகளது கடமையாகும். அதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துவது மாக்சிச லெனினிசவாதிகளது தந்திரோபாயமுமாகும். உடனடியானதான இந் நடைமுறை நீண்டகாலத்தில் சென்றடைய வேண்டிய அடிப்படை மாற்றத்திற்கு வழி வகுப்பதாகும். அதிகார வர்க்கத்தின் பிரதிநிதிகளான சந்திரிகா ரணிலை எதிர்த்து நிற்பது அவசியமாகும்.

••••

நன்றி - நூலகத்திட்டம்



# சனாதிபதித் தேர்தலும் மாக்சியவாதிகளும்

**- மோகன் -**

பாராளுமன்ற அரசியல் மூலம் சோஷலிஸத்தை அடையமுடியாது. அப்படியானால் ஒரு மாக்சியவாதி பாராளுமன்ற அரசியலிலிருந்து முற்றாக ஒதுங்கி நிற்க வேண்டுமா? இது தான் மாக்சிய நிலைப்பாடாக இருக்குமென்றால் தொழிற்சங்கப் போராட்டங்களை எல்லாம் மாக்சியவாதிகள் முற்றாக ஒதுக்க வேண்டும். இன்னும் சிறிது தூரம் இந்த வாதத்தை நீட்டினால் சாதியம், பெண்ணுரிமை, தேசிய இனப்பிரச்சினை, சனநாயக உரிமைகள் போன்ற ஒவ்வொரு விடயத்திலும் மாக்சியவாதிகள் நேரடியாகப் பங்கு பற்றாமல் ஒதுங்கி நின்று விமர்சிக்க வேண்டிய நிலை மட்டுமே மிஞ்சும்.

மாக்சியவாதிகள் சமுதாயத்தை முக்கியமாக அதன் உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் அதன் வர்க்கத் தன்மையின் அடிப்படையில் பார்க்கிறார்கள். வர்க்க முரண்பாடு என்பது எல்லா இடங்களிலும் ஒரே 'விதமாகவோ வெளிப்படையாகவோ தெரியாது. ஒரு சமுதாயத்தின் பல வேறு முரண்பாடுகளிலும் அந்தச் சமுதாயத்தின் வர்க்க முரண்பாடு சில இடங்களில் வெளிவெளியாகத் தெரியாமற் போவதோடு வேறு முரண்பாடுகளின் வாயிலாகவும் தன்னை வெளிப்படுத்தலாம். தேசிய இன ஒடுக்கல் என்பது அடிப்படையில் அதிகார வர்க்க நலன் சார்ந்தது என்பதை இன்று பலர் இன்னும் தெளிவாக அடையாளங் காணுகிறார்கள். நிற அடிப்படையிலும் சாதி அடிப்படையிலும் நடக்கிற ஒடுக்கு முறைக்கும் வர்க்க அடிப்படை உள்ளது. ஆணாதிக்கம் தொடர்பான பிரச்சினையையும் வர்க்க முரண்பாடுகளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. ஆகவே தான் உண்மையான ஒரு மாக்சியவாதி இப்படியான பிரச்சினைகளில் தெளிவான நிலைப்பாட்டை எடுத்து ஒடுக்கப்பட்ட மக்களோடு சேர்ந்து போராட வேண்டிய நிலையில் இருக்கிறார்.

ஒரு சமூக அமைப்புக்குப் பெரிய ஒரு மாற்றம் மிகவும் தேவையான போதும், மக்கள் அந்த மாற்றத்துக்கு ஆயத்தமில்லாமல் இருக்கலாம். அவர்கள் தங்களுடைய பிரச்சினைகளை சமூக அமைப்பின் பிரச்சினையில் ஒரு பகுதியாகக் காணாத வரைக்கும், அவர்களுடைய போராட்டங்கள் சமூகச் சீர்திருத்தம் என்ற எல்லைக்குள்ளேயே நிற்கும். இந்த விதமாக எல்லைப்படுத்துவதை முதலாளிய அரசியல், தாராளவாத அரசியல், சீர்திருத்தவாத அரசியல் போலானவை தொடர்ந்து செய்கின்றன. சட்டச் சீர்திருத்தங்கள், மூலம் சமுதாய மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று நினைக்கிறவர்கள், இந்த விதமான மாற்றத்தைப் பாராளுமன்றத்தின் மூலம் செய்யலாம் என்று நினைக்கிறார்கள். ஒரு மாக்சியவாதி இந்த விதமான மயக்கத்திற்குப் பலியாகும் போது அவர் மாக்சியத்தைக் கைவிட்டவராகி விடுகிறார். இது உலகின் பல நாடுகளிலும் நாம் காணக்கூடிய உண்மை. அப்படியானால் இலங்கையின் அரசியலின் பாடம் என்ன?

இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் இடது சாரிகள் ஒரு வலிய சக்தியாக இயங்கின ஒரு காலம் இருந்தது. என்றாலும் பாராளுமன்ற அரசியல் அதிகாரத்தைப் பிடிக்கும் வாய்ப்பு அவர்களுக்கு இருக்கவில்லை. பாராளுமன்ற அரசியலில் பங்குபற்றுகிற நோக்கம் அதுவாக இருந்திருந்தால் அது 1956 தேர்தலோடு முற்றாகக் கலைந்திருக்க வேண்டும்.

பாராளுமன்றத் தேர்தலைத் தங்களுடைய வெகுசன அரசியல் வேலைகளையும் புரட்சிகர அரசியல் இயக்கத்தையும் முன்னெடுக்கும் நோக்கிலேயே செய்கிறதாகச் சொன்ன இடதுசாரிகளில் ஒரு பகுதியினர் பாராளுமன்ற அரசியலில் தங்களது செல்வாக்கைத் தக்கவைப்பதிலேயே கவனம் காட்டினார்கள். சோவியத் யூனியனில் குருஷ்ச்சொவ் அதிகாரத்தைப் பிடித்த பிறகு, பாராளுமன்ற வாதத்தைத் தழுவிக்கொண்டு இடதுசாரிகளுக்கு அது நல்ல வசதியான பாதையாகி விட்டது. சமசமாஜக் கட்சியின் தலைமையில் பெரும் பகுதி போல கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் கணிசமான பகுதியும் இந்தத் தவறான பாதையில் போனது. என்றாலும் உண்மையான மாக்சியவாதிகள் பாராளுமன்றப் பாதையை நிராகரித்தார்கள்.

நிராகரிப்பது என்பதை முற்றாக ஒதுங்கி நிற்பது என்று நினைப்பவர்கள் அதி தீவிர நிலைப்பாடுகளை எடுத்துத் தனிமைப்பட்டுப் போனார்கள். ஆனால் மாக்சிய லெனினியவாதிகள் என்று அறியப்படும் உண்மையான மாக்சியவாதிகள் அடிப்படையில் சரியான கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பாக ஒரு மாக்சியவாதி இரண்டு நிலைப்பாடுகளை எடுக்கலாம். ஒன்று, அதில் தந்திரோபாயமாகப் பங்கு பற்றுவதும் பொருத்தமான ஒரு கட்சிக்கோ வேட்பாளருக்கோ ஆதரவு தருவதும் ஆகும். மற்றது பாராளுமன்றத் தேர்தலை அறவே பகிஷ்கரிப்பது ஆகும்.

**தேர்தல் மூலம் சோஷலிசத்தை அடைய முடியாது**
**தேர்தலை முற்றாக நிராகரிப்பது தனிமைப்படுவதாகும்.**

பொதுமக்கள் பாராளுமன்ற அரசியல் மீது நிம்பிக்கை இழந்து மாற்று வழியைத் தேடுகிற நிலைமைகளில் பாராளுமன்ற அரசியலை நிராகரிக்க மறுப்பது தவறான பாதையாகும். மறுபுறம், பாராளுமன்ற அரசியல் மீதும் அதன் மூலம் பெறக்கூடிய சில உரிமைகள் பற்றியும் மக்களுக்கு நம்பிக்கை இருக்கிற போது, அதிலிருந்து ஒதுங்குவது மக்களிடமிருந்து ஒதுங்குவது ஆகும். ஆகவே, ஒரு மாக்சிய வாதியும் மாக்சியக் கட்சியும் தேர்தல் பற்றி ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நிலையில் தந்திரோபாயமாகச் சில தேர்தல் தொகுதிகளில் தேர்தலில் பங்கு பற்றலாம். இது அந்தக் கட்சியின் அரசியல் வலிமையைப் பொறுத்து எடுக்கப்படும் முடிவு. இங்கு தேர்தலில் பங்கு பற்றுவதன் மூலம் என்ன செய்ய முடியும் என்ற தெளிவு அவசியம். ஒரு கட்சி தேர்தலில் பங்குபற்றாத இடத்தில், யாரையாவது ஆதரிப்பதாகவும் முடிவு எடுக்கலாம். இந்த முடிவு முழு நாட்டின் மக்களுடைய அல்லது குறிப்பிட்ட பிரதேசத்தின் மக்களுடைய நன்மைகளை கொண்டு எடுக்கப்பட வேண்டியது.

இந்த அடிப்படையில் பார்த்தால், 1947, 1952ம் ஆண்டுகளில் இடதுசாரிகள் தனித்துத் தேர்தலில் போட்டியிட்டது சரியானது. 1953 ஹர்த்தாலுக்குப் பிறகு, மாறிய அரசியல் நிலைமைகளில் யூ.என்.பி. பிரதான பிற்போக்குச் சக்தியாகவும் அதற்கு மாறாக ஸ்ரீ.ல.சு.கட்சி ஒரு ஏகாதிபத்திய விரோதத் தன்மையுடைய தேசிய முதலாளியச் சக்தியாகவும் வளர்ந்த பின் ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு தந்திரோபாயமான ஆதரவும் அதனோடு போட்டித் தவிர்ப்பு உடன்பாடும் சரியானவை தான். 1956ல் பிலிப் குணவர்தன தலைமையிலான புரட்சிகர லங்கா சமசமாஜக் கட்சி பண்டாரநாயகவுடன் ஒரு பங்காளியாகியதும் அரசாங்கத்தில் பதவி ஏற்றதும் இடதுசாரி இயக்கத்தைப் பலவீனப்படுத்திய தவறான காரியங்கள். அது மட்டுமில்லாமல், இனவாத அரசியலில் இடதுசாரிகளை ஆழ்த்தியதில் இந்தப் பங்குபற்றுதலுக்கு ஒரு பெரிய இடமுண்டு. 1963 வரைக்கும் அரசாங்கத்தில் பங்குபற்றாமலிருந்த சமசமாஜக்கட்சி, 1963இல் இடதுசாரி ஐக்கிய முன்னணியைக் குலைத்து அரசாங்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டதும் அரசாங்கத்தில் சேராத போதும் பாராளுமன்றப் பாதையை சோவியத் சார்பு கம்யூனிஸ்ட்டுகள் ஏற்றுக் கொண்டதும் இடதுசாரி இயக்கத்தின் சரிவுக்கு வழி வகுத்தன. எனினும் 1960ம் ஆண்டின் தேர்தல்களில் போல 1965ம் ஆண்டுத் தேர்தலிலும் யூ.என்.பியை முறியடிக்கும் நோக்கில் மக்களை வாக்களிக்கும் படி கேட்டுக்கொண்ட மாக்சியவாதிகள் சரியான ஒரு நிலைப்பாட்டையே எடுத்தனர்.

1970ம் ஆண்டு தேர்தலின் போது மக்கள் மத்தியில் யூ.என்.பி. ஆட்சி மீதிருந்த வெறுப்பை ஒரு புரட்சிகர எழுச்சிக்குச் சாதகமான சூழ்நிலையாகத் தவறாக மதிப்பிட்டதன் விளைவாக தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு மாக்சிய லெனினியவாதிகளின் தலைமை கூறியது. இதன் விளைவாக அவர்கள் மக்களிடமிருந்து தனிமைப்பட நேர்ந்தது. தொடர்ந்து அதற்கு முந்திய சில ஆண்டுகளில் பெற்ற பெரும் வளர்ச்சியில் ஒரு பகுதியையும் இழந்தனர். இத்தவறு 1977ம் ஆண்டு தேர்தலின் பின்பே முழுமையாக விமர்சிக்கப்பட்டுத் திருத்தப்பட்டது. என்றாலும் எந்த நிலையிலும் யூ.என்.பியை விட முற்போக்கான ஒரு சக்தியாக ஸ்ரீ.ல.சு.க. ஏகாதிபத்திய எதிர்ப்பில் முனைப்புடன் இயங்கியதை மாக்சியவாதிகள் மறுக்கவில்லை. 1977 தேர்தலில், ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் பகைத்த லங்கா சமசமாஜக்கட்சியும் சோவியத்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும் யூ.என்.பியுடைய அமோக வெற்றிக்குப் பங்களித்ததுடன் தேர்தலில் மிக மோசமான தோல்வியைப் பெற்றன. இதன்மூலம் பாராளுமன்ற அரசியலில் இறங்கிய இந்த இரண்டு கட்சிகளும் அரசியல் தற்கொலை செய்தன என்று சொல்லலாம்.

ஜே.வி.பி. தலைமை என்னதான் புரட்சி பற்றிப் பேசிய போதும் அதன் பேரினவாத, சந்தர்ப்பவாத அரசியல் எப்போதும் தலைகாட்டியே வந்தது. 1977 தேர்தலின் முன் பாலா தம்பு என்னும் தொழிற்சங்க வாதியோடு ஒரு புறமும் யூ.என்.பி.யோடு மறுபுறமும் ஜே.வி.பி. தலைமை பேரம் பேசியது. 1977 முதல் 1980 வரை ஸ்ரீ.ல.சு.கட்சியையும் இடதுசாரிக் கட்சிகளையும் தாக்குவதில் யூ.என்.பியின் வேலையையே ஜே.வி.பி. செய்தது. 1987ல் இலங்கை – இந்திய உடன்படிக்கையை முற்றிலும் இனவாத நோக்கிலேயே அது எதிர்த்தது. அப்போது அது ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் கூட்டுச் சேரவும் ஆயத்தமாக இருந்தது. பிரேமதாசவுக்கும் ஜே.வி.பிக்கும் இடையே இருந்த உறவும் இங்கு குறிப்பிடத்தக்கது. என்றாலும் இரண்டாம் முறையாகத் தன் வலிமையை அளவு மீறி மதிப்பிட்ட ஜே.வி.பியின் பிழைகட்குச் சிங்கள வாலிபர்கள் கொடுத்த விலை பெரியது.

பதினேழு வருட யூ.என்.பி. ஆட்சிக் காலத்தின் போது யூ.என்.பிக்கு எதிராக ஒவ்வொரு கட்டத்திலும் வாக்களிக்கும் படி கூறுவதற்கு உண்மையான மாக்சியவாதிகள் தவறவில்லை. 1982–83ல் நடந்த சனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலைப் பின் போடுவதற்கான சர்வசன வாக்கெடுப்பிலும் தமிழ் அரசியல் தலைமை தடுமாறிய போதும் மாக்சியவாதிகள் தெளிவாகவே இருந்தார்கள். பல மிரட்டல்களின் நடுவிலும்' அடுத்து வந்த 1989 சனாதிபதித் தேர்தலில் சிறிமா பண்டாரநாயக்காவை ஆதரித்து நின்றபோது மாக்சியவாதிகள் இலங்கையின் பரந்துபட்ட மக்களது உணர்வுகளை மிகவும் சரியாகவே பிரதிபலித்தனர்.

1994ல் யூ.என்.பியின் பதினேழு வருட ஆட்சியை முடிவுகட்ட இலங்கை மக்கள் மிகவும் மும்முரமாக இருந்த சூழலில் ஸ்ரீ.ல.சு.கட்சி தலைமையிலான பொதுசன் முன்னணியை ஆதரிப்பதைவிட வேறு தெரிவு இருந்திருக்க முடியாது. அதை விடவும் பொதுசன முன்னணி அத் தேர்தலில் முன்வைத்த வாக்குறுதிகள் யூ.என்.பி. ஆட்சியின் கீழ் சீரழிந்த பொருளாதாரத்தின் திசையை மாற்றவும் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணவும் ஜனநாயக மனித உரிமைகளை மீட்கவும் அரச அடக்குமுறையையும் அதிகார ஊழலையும் முடிவுகட்டவும் ஆவலாக நின்ற மக்களின் தேவைகளைக் கணிசமாகப் பிரதிபலித்தது. இந்த நிலவரங்களின் கீழ் வேறு எந்தச் சக்தியை ஆதரிப்பதும் யூ.என்.பியை நேரடியாக ஆதரிப்பதுக்குச் சமமாகும். அதன் விளைவாக மக்களிடமிருந்து மேலும் தனிமைப்படவே நேர்ந்திருக்கும். எனவே மாக்சிச லெனினிசவாதிகளின் தெரிவு சரியாகவே அமைந்திருந்தது.

எந்தவொரு தேர்தலிலும் வாக்குப்பெட்டிகளை நிரப்பி மக்கள் தமது தேவைகளை வென்றெடுக்க முடியாது என்பது பற்றி மாக்சியவாதிகள் தெளிவாகவே இருந்துள்ளார்கள். அதேசமயம் தேர்தல் மூலம் வெகுஜனங்களது அரசியல் பங்குபற்றுதலையும் அரசியல் உணர்வையும் கூர்மைப்படுத்தும் தேவையை அவர்கள் ஏற்றார்கள். கடந்த ஐந்து வருடகால அனுபவத்தின் பின்பு பொதுசன முன்னணி அரசாங்கம் பெரும்பாலான பிரச்சினைகளில் யூ.என்.பி அரசாங்கத்தின் போக்கையே தொடர்ந்துள்ளது. தனது தேர்தல் வாக்குறுதிகளை மீறிவிட்டது. சில இடங்களில் யூ.என்.பியை விடத் தீவிரமாக ஏகாதிபத்தியவாதிகளை மகிழ்விக்கவும் முயற்சி செய்திருக்கிறது. என்றாலும் சிறிதளவு கருத்துச் சுதந்திரம் இருப்பதை நாம் மறுக்க முடியாது, அதே சமயம், பொதுமக்கள் பல விதமான அரச அதிகார நெருக்குவாரங்கட்கு முகங் கொடுத்தே வருகிறார்கள். இந்த நிலையில் பொதுசன முன்னணிக்கு ஆதரவு தெரிவிப்பது அதன் தவறான போக்கையும் பொய்யான வாக்குறுதிகளையும் ஏற்பதாகவே முடியும். யூ.என்.பிக்கும் ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும் இருக்கும் முரண்பாடு தரகு முதலாளித்துவத்துக்கும் தேசிய முதலாளித்துவத்துக்கும் உள்ள முரண்பாடு என்பது உண்மை. ஆயினும் இன்று தேசிய முதலாளித்துவம் விடுதலைக்கான மக்களின் பக்கத்தில் உள்ள சக்தியாக இல்லை. அது ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்கிறது. எனவே அதன் மூலம் நாட்டின் இறைமையையோ ஒடுக்கப்பட்ட மக்களது நலன்களையோ சிறுபான்மைத் தேசிய இனங்களது உரிமைகளையோ காப்பாற்ற எதுவும் செய்யமுடியாது. அதன் கூட்டாளிகளான பாராளுமன்ற இடதுசாரிகள் மிகவும் சீரழிந்துவிட்டனர். இந்த நிலையில் இடதுசாரி சக்திகள் ஒரு வலிய முன்னணியைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருக்கிறது. இதை வலியுறுத்தும் முறையிலேயே ஒரு பொது வேட்பாளரை ஆதரிக் வேண்டிய அவசியம் மாக்சியவாதிகளுக்கு இருக்கிறது.

ஜே.வி.பி. தலைமையின் பேரினவாத அரசியல் தமிழ் மக்களது பாரம்பரியப் பிரதேசங்களை ஏற்பது பிரிவினைவாதம் என்று ஜே.வி.பி. கூறுகிறது. அதன் சந்தர்ப்பவாத அரசியல் இன்று வரை மாறவில்லை. பாராளுமன்ற ஆசனங்களின் மீதுள்ள ஆசையால் அது மேலும் மேலும் இனவாத அரசியலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் ஜே.வி.பி. சுயநிர்ணயக் கொள்கையை ஏற்க மறுக்கும் வரை ஒரு மாக்சியவாதி அதற்கு ஆதரவு தருவதற்குப் போதிய வேறு எந்த நியாயமும் இல்லை. சுயலாபத்துக்காக ஜே.வி.பியுடன் எந்த 'மாக்சியவாதியும்' எற்படுத்தும் உறவு அவருடைய மாக்சியத்தின் வெறுமையையே அம்பலப்படுத்தும்.

• • • •

நன்றி - நூலகத்திட்டம்



# இறுதி ஊர்வலம்


## தந்தையும் மைந்தரும் (18) முற்றும்

1961ம் ஆண்டின் சத்தியாக் கிரகத்திற்கு பிறகு செல்வநாயகத்தால் தமிழரசுக்கட்சிக்காகவோ தமிழ்ப் பொதுமக்களுக்காகவோ ஆற்றக் கூடிய பணியோ காட்டக்கூடிய வழியோ இல்லை என்பது தெளிவாகி விட்டது. தென்னிலங்கையின் இரண்டு முதலாளியக் கட்சிகளும் தமிழரசுக் கட்சியால் ஆளுங் கட்சியைத் தீர்மானிக்க முடியும் என்ற எதிர்பார்ப்பும் 1970ல் மண்ணாகி விட்டது. அதை விட, தமிழரசுக் கட்சி ஆதரவில் அமைத்த ஆட்சிக்கு எதிராக இனவாதத்தைக் அதன் விளைவாகத் தமிழரசுக்கட்சி பங்கு பற்றும் பேரினவாதக் கட்சியின் அரசாங்கமும் இனவாதத்துக்கு முன் வளைந்து கொடுக்க வேண்டி வரும் என்பதையும் உணர முடியாத அரசியல் அஞ்ஞானிகள் தான் தமிழரசுக்கட்சியில் இருந் தார்களா? இங்கே தமிழரசுக் கட்சியின் வர்க்க நலன்கள் யூ.என்.பியினது வர்க்க நலன்கட்கு அதிகம் நெருக்கமாக இருந்ததையும் யாரும் மறந்துவிடக் கூடாது. முதலாளியம் வழிநடத்தும் தேசியவாதம் எப்படிச் சீரழிந்தது என்பதற்குத் தமிழகத்தின் திராவிட இயக்கங்கள் இன்று மதவாதிகளுடன் குலாவுவதிலும் சில ஒற்றுமைகளைக் காண முடியும்.

தமிழரசுக் கட்சியின் அழிவைத் தடுத்து நிறுத்திய ஒரே அரசியற் சக்தி சிங்களப் பேரினவாதம் மட்டுமே. சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களின் இருப்பையே மிரட்டுகிற நிலை ஏற்பட்ட பிறகு, தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை எப்படி யாருடன் இணைந்து நடத்துவது என்று தெரியாமற் தடுமாறியது. பழைய இடதுசாரிகளின் சந்தர்ப்பவாதமும் நலிவும் தமிழ் இளைஞர்களிடையே ஊட்டி விடப்பட்ட தமிழ்த் தேசியவாதமும் அவர்களைத் தமிழ்த் தீவிரவாத அரசியலுக்குள் தள்ளிவிட்டது. இந்த நிலைமையில் 1977ல் யூ.என்.பி.ஆட்சி ஏற்பட்ட பின்னர். இன்னும் மோசமாவதையும் தமிழரசுக் கட்சி வளர்த்த தமிழ்த் தேசியம் அதையும் அதன் வாரிசான கூட்டணியையும் வரலாற்றின் குப்பை மேட்டுக்கு அனுப்புவதையும் யாராலும் தடுத்திருக்க முடியுமா? அமிர்தலிங்கத்தின் இடத்தில் செல்வநாயகம் கூட்டணியின் தலைவராக இருந்திருந்தால் கூட்டணியின் சில தவறுகள் தவிர்க்கப்பட்டிருக்கும் என்று பின் நோக்கிய பார்வையில் கருத்துக் கூறுகிறவர்கள் இருக்கிறார்கள். இக் கருத்தில் சிறதளவு உண்மை உள்ளது. ஆயினும் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் பேரினவாத அரசியலையும் அவரது கைகள் போல செயற்பட்ட பேரினவாத இன வெறியர்களையும் 1983ம் ஆண்டு ஜூலை கலவரத்தின் போது கவனித்தவர்கள், கூட்டணியின்முன் இருந்த தெரிவு, பேரின வாதத்திற்கும் பணிந்து போய் அழிவதா பணிய மறுத்து அழிவதா என்பது தான் என்று உணர்வார்கள். கூட்டணியின் தெரிவு எதாயிருந்தது என்று நாம் அறிவோம். 1965க்குப் பிறகு தமிழரசுக் கட்சியின் நடத்தையைக் கவனித்த எவருக்கும் கூட்டணி வேறுவிதமாக வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் தமிழரசுக்கட்சியின் எதிர்காலத்தை 1970 வரையிலான அதன் கடந்தகாலம் தீர்மானித் தாயிற்று. அதற்குப் பங்களித்தவரான செல்வநாயகத்தால் அதை மாற்றியிருக்கவும் முடியாது.

தமிழரசுக் கட்சிக்காரர்களுக்கு இருந்த ஒரே அரசியற் சொத்து செல்வநாயகம் பற்றி உருவாக்கப் பட்டிருந்த படிமமாகும். அகிம்சா வாதி, சத்தியவான், தீர்க்கதரிசி போன்ற குணாம்சங்களை அவருடன் இணைத்துக் கருதுவது மக்களுக்குப் பழக்கப்பட்டு விட்டது. எனவே அவரது சாவையும் தமது அரசியலுக்கு முழுமையாகப் பயன்படுத்தக் கூட்டணி அரசியல்வாதிகள் முடிவு செய்தனர். இதற்கும் அவர்கட்கு ஒரு நல்ல முன்னுதாரணம் இருந்தது. 1974ல் டட்லி சேனநாயக இறந்த போது அவரது சடலத்தை வைத்து அரசியல் லாபம் தேடிய ஜே.ஆர்.ஜயவர்த்தன அதன் மூலம் தனக்கும் டட்லி சேனநாயகாவிற்கு இருந்த பிணக்கை மூடி மறைத்து, பிரேமதாசாவைத் தலைமைப் பதவிக்கு வரமால் தடுத்துத் தன்னை





முதன்மைப் படுத்தி, அரசாங்கத் துக்கு எதிரான பிரசாரத்தையும் செய்தார். கூட்டணித் தலைமை அதே பாடத்தை இன்னும் விரிவான அளவில் நடத்த முற்பட்டது. செல்வநாயகத்தின் உடல் தகனம் செய்யப்பட்டு அவரது சாம்பல் தமிழ்ப் பிரதேசங்களில் ஊர்வலமாகக் கொண்டுசெல்லப் பட்டது. இதன் விளைவாகத் திருகோணமலையில் சில அசம்பாவிதங்கள் நேர்ந்தன. சிங்களப் பேரினவாதிகள் இந்த ஊர்வலத்தைக் காரணம்காட்டி வன்முறையைக் கிளறிவிட்டனர். திருகோணமலையில் வைத்தே தமிழீழக் கொள்கை 1976ல் பிரகடனம் செய்யப்பட்டதாலேயே இனவாதிகள் இந்த ஊர்வலத்தை ஒரு தமிழ் ஆதிக்க நடவடிக்கை யாகக் காட்ட விரும்பினர்.

கூட்டணி எதிர்பார்த்த அரசியல் மூலதனம் இந்த ஊர்வலத்தால் கிடைத் தாலும் செல்வநாயகம் உயிரோடு இருந்தவரை வெளி வராமல் இருந்த சில உட்கட்சி மோதல்களைத் தூண்டி விடும் முறையில் அமிர்த லிங்கத்தைப் புதிய தலைவராக்கும் முயற்சிகள் அமைந்தன. செல்வ நாயகத்தின் தமிழ்த் தேசியவாதம் வடக்கு கிழக்கின் தமிழரையும் மலையகத் தமிழரையும் முஸ்லிம் களையும் இணைக்கத் தவறினாலும், மட்டக் களப்பில் உள்ள தமிழரில் கணிசமான பகுதியினரைத் தமிழரசுக் கட்சிக்குப் பின்னால் திரட்டுவதில் வெற்றி கண்டது. இது உண்மையான ஒற்றுமையாக அமை யாமைக்குத் தமிழரசுக் கட்சிக்குள் இருந்த சிறு குழு ஒன்றின் அரசியல் ஆதிக்கத்தின் பங்கும் முக்கியமானது. 1977 தேர்தலிலேயே அமிர்தலிங்கம் தலைமை வடக்குக்-கிழக்குத் தமிழரின் ஒற்றுமை என்ற தோற்றப்பாட்டுக்கு வேட்டு வைத்து விட்டது.

ஒரு வகையில், செல்வநாயகம் பற்றிய மயக்கங்களால் கட்டிக்காக்கப் பட்டதான சாரமற்ற ஒரு ஒற்றுமை செல்வநாயகத்தின் சாவின் பின்னர் நொறுங்குண்ணத் தொடங்கியது. தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் அது புது வடிவில் மீளமைக்கப்பட்ட போது தமிழரசுக் கட்சியும் கூட்டணியும் தமிழ்த் தேசியவாத அரசியலில் பெறுமதியற்றனவாகி விட்டன.

எவ்வாறாயினும் செல்வநாயகம் பற்றிய காந்தியவாதி தீர்க்கதரிசி, தமிழரசுத் தந்தை என்றவாறான படிமங்கள் காரணமாக அவரது பேர் இன்று வரை தமிழ்த் தேசிய வாதிகட்கு மிகவும் பயன்பட்டே வந்துள்ளது. தமிழரசுக் கட்சி முதல் விடுதலைப் புலிகள் வரை செல்வ நாயகத்துக்கு ஏதோ வகையில் உரிமை கொண்டா டுகின்றனர். அந்த வகையில் தமிழரசுக் கட்சி அரசியல் சிந்தனையின் கைதி களாகவே விடுதலை இயக்கங்கள் எனப்பட்ட யாவுமே இருந்து வந்துள்ளன.

இன்று தமிழ் இன விடுதலைப் போராட்டத்தின் வர்க்கப் பண்பு மிகவும் மாறிவிட்டது. அது அதன் வர்க்க இயல்புக் கேற்ற அரசியல் பாதையை வகுப்பதாயின் தன் வரலாறு பற்றிய மயக்கங்களையும் வரலாற்றுப் பொய்களையும் களைந்தாக வேண்டும். இக் கட்டுரைத் தொடர் அந்த நோக்கிலேயே எழுதப்பட்டது. செல்வ நாயகம் பற்றிய புனைவுகளினின்று விடுபடும் போதே தமிழத் தேசிய இனத்தின் அரசியல் வரலாற்றைப் பற்றிய தெளிவான பார்வை இயலுமாகும். ஈழத் தமிழர்கள் தமது அரசியல் வரலாற்றை மீளாய்வு செய்யும் தேவை இன்று முக்கியமாகியுள்ள நிலையில் இக் கட்டுரை தனது பயனுள்ள பங்களிப்பைத் தந்துள்ளது என நம்புகிறேன்.

முற்றும்

# தேசிய முதலாளித்துவமும் இடதுசாரிகளும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யூ.என்.பியை ஆட்சிக்கு வரவிடக்கூடாது என்று கூறுவது எவ்வகையிலும் பிழையான நிலைப் பாடல்ல, ஆனால் யூ.என்.பியை ஆட்சிக்கு வரவிடாமல் செய்வதற்காக கொள்கையிலும் நடைமுறையிலும் யூஎன்பியிலிருந்து அடிப்படையில் பெரிதளவு வித்தியாசமில்லாத சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவர வேண்டும் என்று கூறவது எவ்வகையில் சமகாலத்தில் செல்லுபடியான கருத்தாக முடியும்.

யூ.என்பி என்ற பெருமுதலாளித்துவ கட்சிக்கு மாறாக இலங்கை நாட்டின் தேசிய பொருளாதாரம், தேசிய அரசியல், தேசிய கலாசாரம் என்பவற்றை குறைந்த பட்சமாவது சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதன் நிலைப்பாடாக கொண்டிருந்தது. அதனால் தேசிய முதலாளிகளுக்கும் தேசிய வாதிகளுக்கும் மட்டுமின்றி மாக்சிய லெனினிஸ்ட்டுகளுக்கும் இடதுசாரிகளுக்கும் எதிரியாக யூ.என்.பி இருந்ததால் யூ.என்.பி பொது எதிரியாக அடையாளம் காணப்பட்ட துடன் அதனை தோற்கடிக்க அல்லது அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்த, அரசியல் ரீதியாக பலமாக இருந்த தேசிய முதலாளித்துவத்தை மாக்சிஸ்ட்டு லெனினிஸ்ட்டுகள் அன்று ஆதரித்ததில் தவறில்லை.

ஆனால் சமகால உலகநிலைமையில் ஏகாதிபத்திய அடக்குமுறைகள் 'பூகோளமயமாதல்' என்ற பெயரில் நடைபெறுகின்ற போது தேசிய முதலாளித்துவ அரசியல் தலைமைகள் பெருமுதலாளித் துவத்தை எதிர்க்கின்ற வீரியமான சக்திகளாக வன்றி அதனிடம் மண்டியிடுகின்ற சக்திகளாக மாறிவருகின்றன. தேசிய முதலாளித்துவ அரசியல் தலைமைகள் தேசிய சக்திகளின் அபிலாஷைகளுக்கு எதிராக செயற்படுகின்றன. அச்சக்திகளும் பெருமுதலாளித்துவ 'அரசியல் தலைமைத்துவ சக்திகளைப் போன்று ஏகாதிபத்தியத்தினதும் உலகவங்கியினதும் பல்தேசிய கம்பனிகளினதும், ஆயுத, போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ள 'சர்வதேச மாபியா' சக்திகளினதும் ஏஜன்டுகளாக மாறிவருகின்றன.

அவ்வாறான நிலைமையில் பெருமுத லாளித்துவ அரசியல் தலைமை மட்டுமே பொது எதிரி என்ற கருத்தியல் இன்றும் செல்லுபடியான தாகுமா?

17 வருட மக்கள் விரோத ஆட்சி செய்த யூ.என்.பியை தோற்கடிப்பதில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பங்களிப்பு மிகவும் பெறுமதியானது. ஆனால் ஆட்சிக்கு வந்த பிறகு இந்நாட்டு மக்களையும், வளங்களையும் சுரண்டு கின்ற பல்தேசிய கம்பனிகளுக்கு முக்கிய இடமளித்து 'பூகோள மயமாதலை' அங்கீகரித்து யூ.என்.பி காலத்தில் நிறைவேற்றப்படாதிருந்த தனியார் மயமாக்கலை மிகவும் விரைவாக பொதுஜன ஐக்கிய முன்னணி செய்து வந்துள்ளது. அத்துடன் முதலாளித்துவ ஜனநாயகத்தின் "செல்லுபடியாகும் தன்மையை பாதுகாக்கும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட தனியார் - ஜனாதிபதி ஆட்சி முறையை பாதுகாப்பதில் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. ஆயுதவியாபாரிகள், யுத்தவாதிகளின் ஆலோசனைப்படி யுத்தத்தை தொடர்ந்து நடத்துகிறது. மேற் கூறப்பட்ட முக்கிய விடயங்களை கொண்டு பார்க்கும் போது யூ.என்.பி அரசியல் தலைமைத்துவத்திற்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி தலைமைத்துவத்திற்கும் வித்தியாசத்தைக் காணமுடியுமா?

ஆனால் தேசிய அபிலாஷைகளை முதன்மைப்படுத்தும் பூகோளமயமாக் கலுக்கு எதிராக ஏகாதிபத்தியதிற்கு எதிரான அரசியல் நடவடிக்கை களினூடாகவே இன்றைய நிலைமையை வெற்றி கொள்ளமுடியும். தேசிய சக்திகள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் இருந்தாலும் அவைகள் மிகவும் அரசியல் ரீதியில் வலுவிழந்த நிலைமையிலே இருக்கின்றன. அதற்கு வெளியிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் இருக்கின்றன. அவற்றுக்கு அரசியல் தலைமை கொடுத்து நிலைமையை வெற்றிக் கொள்ளும் அளவிற்கு தேசிய சக்திகள் பலமாக இல்லை, அவைகள் வேறு வேறு வடிவங் களில் அரசியல் தலைமைகளை கொடுக்க முனைந்தாலும் ஏகாதிபத்திய, பெருமுதலாளித்துவ சக்திகளிடம் அடிபணிந்து போகும் சர்வதேச நிலைமையே இருக்கின்றது. அவர்களின் வர்க்க இயல்பு அவ்வாறே இருக்கிறது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமைக்கு பிலிப்பைன்ஸில் அக்கினோவின் தலைமைக்கு ஏற்பட்ட அதேகதி ஏற்பட்டது. இந்திய அரசியல் தலைமைத் துவங்களிடமும் இந்த தாக்கத்தை காணமுடிகிறது.

எனவே இன்றைய ஏகாதிபத்திய பூகோளமயமாதலின் கீழ் தேசிய பொருளாதாரம், தேசிய சுதந்திரம், தேசிய கலாசாரம் போன்றன அச்சுறுத்தப்படுகின்றன. நேரடியான ஏகாதிபத்திய ஆட்சியில்லாவிடினும் நாடுகள் நவக்காலனித்துவ பிடிக்குள் இருக்கின்றன. நாடுகளுக்கு இன்னும் ஒரு முறை சுதந்திரம் தேவைப் படுகிறது. அதற்காக இன்னனுமொரு சுதந்திரப் போராட்டம் தேவைப் படுகிறது. அப்போராட்டத் துக்கு தேசிய முதலாளித்துவ சக்திகள் தலைமை தாங்க முடியாதுள்ளன. பெயரளவிலேனும் கிடைத்த சுதந்திரத்தை தக்கவைத்துக் கொள்ள தேசிய முதலாளித்துவ சக்திகள் தகுதியற்றன என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது. அதற்கு தலைமை தாங்க மாக்சிஸ்ட்டு லெனினிஸ்ட்டுகள் இடதுசாரிகளே பொருத்தமானவர்கள்.

இலங்கையில் விஷேட சூழ்நிலையில் மாகிசிச லெனினிஸ சக்திகள் பலமாக இல்லாதபடியால் அவர்களையும் உள்ளடக்கிய இடதுசாரி தலைமை யே பொருத்த மான அரசியல் தலைமையாக இருக்க முடியும். துரதிஷ்ட வசமாக இலங்கையில் இடதுசாரிகள் யூ.என்.பிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் பதிலீடாக

தொடர்ச்சி 7ம் பக்கம்

நன்றி - நூலகத்திட்டம்



# இனப்பிரச்சினைக்குத் தீர்வு இராணுவத் தீர்வு அல்ல!

## விக்டர் ஐவன் கூறுகிறார்

அண்மையில் "சண்டே ரயிம்ஸ்" பத்திரிகையில் விக்டர் ஐவான் எழுதிய கட்டுரையில் இராணுவ நடவடிக்கை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு கான முடியாதெனக் குறிப்பிட்டுள்ளார்.

"40,000 படையினரின் 33மாதகால வெற்றியை பிரபாகரனால் 72மணித்தியால நாட்களில் மாற்றியமைக்க முடிந்ததை எமது சமுதாயம் விளங்கிகொள்ளாவிடில் வடகிழக்கில் ஒரு தனிநாடு அமைவதற்கான நாள் வெகுதுாரத்தில் இல்லை."

பிரதான கட்சிகள் எதுவும் இந்தப் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வு வேண்டுமென்று ஒரு தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருக்க வில்லை. வட-கிழக்கில் தமிழ் மக்கள் தமது அலுவல்களை தாமே நிர்வகிக்கக்கூடிய ஒரு அரசியல் ஒழுங்கை ஏற்படுத்தும் தேவை உண்டென்ற போதும், அது மட்டும் பிரச்சினைக்கான தீர்வாக அமையாது. ஒரு திட்டவட்டமான அரசியல் சீர் திருத்தத்தின் மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு சாத்தியம் என்ற போதும் பிரபாகரனையும், எல்ரீரி யினரையும் மையமாகக் கொண்ட மேலதிகப் பிரச்சினையும் உண்டு. யுத்தத்தின் மூலம் தமது சீவனோபாயத்தை நடாத்திவந்த மக்களுக்கு அடுத்தபடியாக என்ன செய்ய வேண்டும் என்பது மேலதிக பிரச்சினையாகும்.

இந்த இரண்டு மேலதிக பிரச்சினைகளும் இனப் பிரச்சினை என்ற பிரதான பிரச்சினையுள் அடங்கியிருக்கும் பிரச்சினையே மிகவும் சிக்கலானதும், உணர்ச்சிகரமானதும்.

இனப்பிரச்சினைத்தீர்வுக்கு ஒரு சாத்தியமான நடவடிக்கையின் பின் பிரபாகரனும், அவரது புலிப்படையினரும் நாட்டை விட்டு வெளியேறி விடுவார்கள் என்றோ அல்லது இளைப்பாறி விடுவார்கள் என்றோ எதிர்பார்க்கமுடியாது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த பின் இவர்களுக்கு என்ன ஒழுங்கு செய்ய வேண்டும் என்பதை காட்டியே திட்டமிடல் வேண்டும். அந்தத் தீர்வானது பிரபாகரனும், எல்ரீரியினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயும் சிங்களவர்களது பாதுகாப்பிற்கு குந்தகமில்லாமலும் இருத்தல் வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை வழங்காத வரை பிரபாகரனும் எல்ரீரியும் இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக எந்தத் தீர்வையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அரசாங்கம் முன்னெடுத்த தீர்வோ, அல்லது பொதுப் படையாக முன்வைக்கப் படும் கருத்துக்களோ இந்தப் பிரச்சினையை கருத்தில் எடுத்துக் கொள்ள வில்லை.

அடுத்த பிரதான பிரச்சினைதான் இந்த யுத்தத்தையே தமது வாழ்க்கையை நடாத்துவதற்கு ஒரு வழியாக கொண்டுள்ள படையினருக்கு எத்தகைய வழியைக் காட்ட வேண்டும் என்பதே.

இன்று தமிழர்களில் ஒரு கணிசமானோர் மேற்கு நாடுகளில் வாழ்கின்றார்கள். இந்த நாட்டில் வாழ்ந்ததைவிட நல்ல வாழ்கையையே நடாத்துகிறார்கள். இனப் பிரச்சினை இருந்திராவிடில் அவர்கள் வாழ்வில் இத்தகைய மாற்றம் ஏற்பட்டிராது. மறுபுறத்தில் இந்தப் பிரச்சினையானது சிங்கள சமுதாயத்தின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் நல்ல பலனைக்கொடுத்துள்ளது. மத்திய கிழக்கில் வேலைக்குச் சென்றவர்களின் கிராமப்புற குடும்பங் களுக்கு கிடைக்கும் மிகப் பெரிய வருமானத்திற்கு இரண்டாவது படியாக இராணுவத்தில் சேவை யாற்றுவதன் மூலம் கிடைக்கிறது.

நெற்செய்கை மூலமும், உப உணவுச் செய்கை மூலம் கிடைக்கும் வருமானம் சொற்பமானது மத்திய கிழக்கில் வேலை செய்யும் இலங்கையரின் எண்ணிக்கை 500,000 எனவும் அதன் மூலம் பெறப்படும் அன்னிய செலவாணி 3000 கோடி ருபா எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ பொலிஸ் போன்ற பாதுகாப்புச் சேவையில் உள்ளவர்களின் எண்ணிக்கை 275,000பேர் எனவும், அதன் மூலம் கிராமப்புற குடும்பங்களுக்கு கிடைக்கும் வருமானம் 2500 கோடி ரூபா எனவும் அறியப் படுகிறது. இந்த இரண்டு துறையிலுமிருந்து கிடைக்கும் வருமானத்தை விட குறைவான தொகையே கிராமவாசிகள் பெறுகின்றனர். இலங்கையில் வருடாந்த நெல் உற்பத்தியின் பெறுமதி 2684.2 கோடி ரூபாயாகும். உப உணவுப் உற்பத்தியின் பெறுமதி 3312 கோடி 60லட்சமாகும்.

இந்த உற்பத்தியின் மூன்றில் ஒன்றே கிராமங்களுக்கு கிடைக்கும் வருமானமாகும் அதாவது 1998கோடி 90லட்சம் ரூபாய் ஆகும். சமுர்த்தி மூலம் இவர்களுக்கு கிடைக்கும் வருமானம் 79 கோடி 60லட்சமாகும்.

இதன் காரணமாகவே எதுவித சுய சிந்தனையும் இல்லாத கிராமப்புற இளைஞர்கள் இராணுவத்தில் சேருகின்றனர். ஒரு இளைஞன் சொற்ப கல்வியுடன் பெறும் சம்பளமானது உயர் கல்வி பெற்ற இளைஞனது ஆரம்ப சம்பளத்தின் இருமடங்காகும். இராணுவத்தில் உணவு, தங்குமிடம். ஆடை என்பன எதுவித கட்டணமுமின்றி கிடைக்கிறது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தால் இந்த இளைஞர்களுக்கு என்ற மாற்ற வழி செய்ய வேண்டும் அதை உணர்ந்து அரசாங்கம் செயற்படாதவரை நீண்ட காலத்திற்கு முன்னரே பிரபாகரன் தனி நாட்டை பிரகடனப் படுத்துவது சாத்தியமானதொன்றேயாகும்.

## “போதுமடா சாமி”

*புறப்பட்டது வெண்புறா அன்று*
*யுத்தத்தின் மூலம் சமாதானம் காண*
*நாடாளும் தந்திரமாய் மக்களை ஏமாற்றி*
*நரபலிதான் மிஞ்சியது இன்று !*

*வால் பிடித்து செட்டையில் குளிர் காய்ந்த*
*வில்லன்கள் செய்வதறியாது திகைக்க*
*மீண்டும் தேர்தல் ஒலி பளிச்சிட*
*மீளாத் துயில் கனவு காண்கின்றார்கள்.*

*எத்தனை கொலைகள் எத்தனை கொடுமைகள் !*
*எத்தனை விதவைகள், எத்தனை அகதிகள் !*
*எத்தனை முடங்கள், எத்தனை பாலியல் துன்புறுத்தல் !*
*இன்னும் எத்தனை எத்தனை எத்தனையோ !*

*செத்தவர் கதைகள், சித்திரவதைகள்*
*குபீர் குண்டு வீச்சில் மாண்டவர் கதைகள்*
*செய்த ஒப்பந்தங்கள், பேச்சு வார்த்தைகள்*
*சின்னா பின்னப்பட்டதை சொல்லவும் வேண்டுமா*


*பட்டது போதுமடா சாமி ! ஐம்பது ஆண்டு*
*மக்கள் பட்டதுயர் தாங்கியது போதும்*
*பாடம் புகட்ட அளியுங்கள் வாக்கை*
*மக்கள் நலம் பேணும் மூன்றாம் அணிக்கு.*

*அந்த நாளும் வந்தாச்சு*
*துயர் துடைப்போம், யுத்தத்தை நிறுத்த*
*அளியுங்கள் உங்கள் வாக்கை வாசுவுக்கே*
*துன்பம் அகல புதிய நூற்றாண்டை வரவேற்போம்.*

- ஆதவன் -

பேராசிரியர் க. கைலாசபதியின்
17வது நினைவு நாள் (06-12-1999)

## நிலமானிய முறை என்றால் என்ன?



'நிலம்' 'மானியம்' என்னும் இரு சொற்களும் இம்முறையில் முக்கியமாயுள்ளன. மனிதன் தன்னுடைய நாகரீகப்படிகளின் பாதையில் சில பிரதானமான படிகளைக் கடந்து வந்துள்ளான். புராதன மனித சமூகம் சிறுச்சிறு குழுக்களாக இயற்கையின் மத்தியில் வாழ்ந்த நிலையிலே கூட்டுமுறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைக் கூட்டாக உபயோகிக்கும் புராதனப் பொதுவுடைமை நிலவியது. பின்னர் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியையொட்டி, அடிமைச் சமூகங்கள் தோன்றின: அங்கே வர்க்க வேறுபாடுகளும் வலுத்தன. மேலோராகக் கருதப்பட்ட ஆளும் வர்க்கத்தினருக்கு எதிராகக் கீழோராக மதிக்கப்பட்ட சாதாரண மக்களின் போராட்டம் நாளடைவில் வென்றது. அதன் விளைவாகவே நிலப் பிரபுத்துவம் தோன்றியது. அங்கே நிலவிய பொருளாதார அமைப்பி னையே நிலமானிய முறை என்று கூறுகின்றோம். அது பொருளுற்பத்தியை அடிப்படையாகக் கொண்டதே.

மனிதனுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் மனிதர்கள், பொருள் உற்பத்திப் பணியில் ஒருவரோடு ஒருவர் உறவு கொள்வதனையே சமூக விஞ்ஞானிகள் உற்பத்தி உறவு என்கின்றனர். அது ஒருவருக் கொருவர் மனமார விரும்பி உதவிக் கொள்ளும் உறவாக இருக்கலாம். எவ்வாறாயிருப்பினும், மனிதருக் கிடையே பொருள் உற்பத்தித் துறையில் உறவு ஏற்படுகிறது, இவ்வுறவே சமூக உறவாகவும் அமைந்து விடுகிறது. இந்த அடிப்படையின் துனைகொண்டு பார்த்தால் நிலமானிய முறையிலே பொருள் உற்பத்தி உறவானது நிலப் பிரபுவின் உடைமையாக உற்பத்திச் சாதனங்கள் அமைந்திருப்பதிலே தங்கியுள்ளது. உலகமெங்கும் நிலவிய நிலமானிய முறையை நன்கு ஆராய்ந்தவர்கள், நிலமானிய முறையானது ம்ன்னர்கள் தமக்குப் பணிசெய்தவர்களுக்கு (தொடக்கத்திலே போரில்) மானியமாகக் கொடுக்கும் நிலவுரிமையினையே குறிக்கும் என்பர். நிலத்தில் உழவுத் தொழில் செய்த பண்ணையாட்கள் அரசனிடமிருந்து மானியம் பெற்ற பிரபுவின் ஆணைக்குள் இருந்தனர். ஆயின் அவர்கள் பிரபுக்களின் அடிமைகளாகக் கூறப்படவில்லை. சில தேசங்களில் பண்ணையடிமைகள், வாங்கி விற்கப்படும் சரக்காகக் கணிக்கப்பட்டனர். எனினும் நிலப்பிரபுத்துவ அமைப்பில் பண்ணையாட்கள், குடியானவர்கள், நிலத்துடன் பிணைக்கப்பட்டிருந்தனரே யன்றிப் பெரும்பாலும் அடிமைகளாகக் கொள்ளப்பட்டவர்களல்லர். பழைய அடிமை நிலையிலிருந்து விடுபடுவதற்காகவே வியாபாரிகளுக் கெதிராகவும் குழுத் தலைவர்களுக் கெதிராகவும் அடிமைகள் போர்தொடுத்திருந்தனர். நிலமானிய முறையிலே பண்ணை வேலையாள் பழைய அடிமை நிலைக்கும் 'சுதந்திர' நிலைக்கும் இடை நடுவே இருந்தான். நிலத்தில் தனக்கும் ஓரளவு அக்கறை இருந்தமையால் ஊக்கத்துடன் உழைத்தான். மன்னனுக்குப் பணிந்தும், உதவிகள் செய்தும் நிலப்பிரபு தனது சுகம் சொத்துக்களைப் பாதுகாத்துக் கொண்டதைப் போலவே, நிலமானிய முறையில் வாழ்ந்த பண்ணை யடிமைகளும், சில கைத் தொழிலாளரும், நிலப்பிரபுவிற்குக் கொடுத்து எஞ்சிய பொருள்களைத் தமதாக்கிக் கொண்டு வாழ்ந்தனர். இவர்களை ஒருவகையான வாரக் குடிகள் என்று இக்கால வழக்கில் வேண்டுமானால் நாம் கூறலாம். சோழர் காலத்திலே இதனைக் காராண்மை என்று வழங்கினர். உழவுத் தொழிலையே தொழிலாக (குடும்ப மரபு) மேற்கொண்டு வந்த குடிகளுக்கு உள்ள நிலவுரிமையை "வெள்ளான்" வகை என்றழைத்தனர். அவற்றையெல்லாம் பின்னர் கவனிப்போம். இங்கே நிலமானிய முறையின் முக்கியமான அம்சங்களை நோக்குவோம்.

நிலமானிய முறை அமைப்பிலே உற்பத்தி உறவுகள் செம்மைப் பட்டமையால், உற்பத்தி பெருகியது. விவசாயம் பெருவளர்ச்சியுற்றது: புதிய புதிய நிலங்கள் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டன. செய்கை முறையிலும் பல அபிவிருத்திகள் ஏற்பட்டன. விவசாய வளர்ச்சியின் அருகருகே சிறு கைத்தொழில்களும் துரித வளர்ச்சியுற்றன. உழவுத் தொழிலுக்குத் தேவையான கருவிகள் பெருகின. பிரபுக்களும் வியாபாரிகளும் பேரரசும் அன்றாட வாழ்க்கையில் உபயோகிக்கும் பொருட்கள் கூடியளவு உற்பத்தி செய்யப்பட்டன. போர்களையொட்டி போர்க்கருவிகளும் தளவாடங்களும் திருந்தின. கப்பற் போக்குவரத்து முன்னெப்பொழுதும் காணாத பெருநிலையையடைந்தது. இந்த மாற்றங்கள் யாவும் அக்கால வர்க்க அமைப்பைப் பெரிதும் பாதித்தன. நிலத்தை உரிமையாக உடையவர்கள் ஆளும் வர்க்கத்தினராக நிலைபெற்றனர். அவர்களுக்கு எதிராகப் பண்ணையடிமைகள் மற்றொரு வர்க்கத்தினராக இருந்தனர். சுருங்கக் கூறின் ஆண்டான் - அடிமை உறவு உருவாகியது.

நிலமானிய முறையின் பொருளாதார அடிப்படை இவ்வாறிருக்க, அதன் அரசியல் - ஆட்சிமுறை - வடிவத்தில் இருவளர்ச்சிப் படிகளைக் காணலாம் என்று வரலாற்றாசிரியர் கருதுவர். தொடக்கத்திலே அதாவது முதலாவது கட்டத்திலே நிலப்பிரபுக்கள் தமக்குத் கீழேயுள்ள மக்களுடன் நேரடித் தொடர்புள்ளவராக இருந்தனர். தமது சிறுபடையுடன் போர்க்களங்களுக்குச் சென்று மீண்டனர். தமது சிறிய நிலப்பரப்பின் மீது பூரண ஆதிக்கஞ் செலுத்தினர். சுருங்கக் கூறின் நிலப்பிரபு ஒரு 'குட்டி' இராசாவாக இருந்தான். நாட்டின் வழமைகள் யாவரையும் கட்டுப்படுத்தின. இரண்டாவது நிலையிலே வளர்ச்சியுற்ற நிலையிலே ஆட்சி முறையானது அழகாக அமைந்த ஒரு கூர்நுதிக் கோபுரம் போலக் காணப்பட்டது. அரசனுக்கும் பிரபுக்களுக்கு மிடையேயிருந்த உறவு நன்கு பிணைக்கப் பெற்றது. உறவுகள் யாவும் சங்கிலிப் பின்னலாகத் தொடர்பு பெற்றன. உச்சியிலே கலசம்போலப் பேரரசன் வீற்றிருந்தான். கீழே வரவர, அகன்று அகன்று ஆகக் கீழ்க்கற்களாகப் பண்ணையடிமைகளும் சாதாரண சிறு கைத் தொழிலாளரும் இருந்தனர். யாவும் மத்திய ஆட்சியின் பிடிக்குள் கொண்டு வரப்பட்டது. அதே சமயத்தில் கீழே போகப்போக உரிமைகளும் கடமைகளும் தெளிவாக்கப்பட்டன. சோழப் பேரரசின் மகோன்னதமான வளர்ச்சியிலே இவ்விரு வளர்ச்சிப்படிகளையும் தெளிவாகக் கண்டு கொள்ளலாம். விசயாலயன் காலத்துக்கு முன்னிருந்து சுந்தரச்சோழன் ஆட்சிவரை முதற்படிக் காலமெனக் கொண்டால், இராசராசன் ஆட்சிக்காலத்தில் இரண்டாம் படி தொடங்குகிறது எனலாம். இந்தப் படி முறை வளர்ச்சியானது பெரும்பாலும் சுமுகமான முறையிலேயே நடைபெற்றது என்பர் வரலாற்றசிரியர். அதற்குச் சமயமும் தத்துவமும் வெவ்வெறு வகைகளில் உதவியுள்ளன. மத்திய கால ஐரோப்பாவில் கத்தோலிக்க சமயமும் தத்துவமும் இம் முறைக்குச் சிந்தனைப் பக்கபலமாக அமைந்தன. சில பழைய கருத்துக்களும் புத்துயிர் பெற்றுக் கைக்கொள்ளப் படுவதுண்டு—

பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் நூலிலிருந்து

நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்குத் திமோர்: விடுதலையின் எதிர்காலம்?

கிழக்குத் திமோர் மக்களின் விடுதலை மக்களின் ஆயுதமேந்திய போராட்டத்தின் விடுதலையாக அமையவில்லை. மக்களது விடுதலைப் போராட்டம் இந்தோனீசிய ராணுவ அடக்குமுறைக்கு எதிரான ஒரு இயக்கமாகத் தொடர்ந்தும் ராணுவ எதிர்ப்பு கெரில்லா இயக்கம் ஒன்று இருந்ததும் உண்மை, ஆயினும் இவ் விடுதலைப் போராட்டம் ஒரு புரட்சிகர அரசியல் தலைமையின் கீழான ஒரு ஆட்சியாக அமையும் சூழல் ஏற்படாத விதமாக அங்கு ஐ.நா சபையின் பேரில் அமெரிக்க ஆசியுடன் அவுஸ்திரேலியப் படைகளின் கண்காணிப்பில் புதிய சுதந்திர ஆட்சி நிறுவப்படவுள்ளது. இதன் பின்னணியும் பின்விளைவு களும் நாம் கவனமாக யோசிக்க வேண்டியவை.

இந்தோனீசியாவில் ஏற்பட்ட மக்கள் எழுச்சியைச் சமாளிக்க முடியாமல் அங்கு சுகார்த்தோ பதவி விலகியதன் விளைவாக திமோரின் விடுதலைக்குச் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டது. திமோரில் இந்தோனீசியப் படைகளின் உதவியுடன் இந்தோனீசிய ஆட்சியின் ஆதரவாளர்களின் கொலை வெறியாட்டம் நடந்த போது எதுவும் செய்யாமல் கிழக்குத் திமோர் மக்கள் அகதிகளாக விரட்டியடிக்கப்பட்ட பின்பே ஐ.நா.சபையின் குறுக்கீடு நடந்தது. இதன் விளைவாக கிழக்குத் திமோர் மக்கள் அமெரிக்காவையும் அவுஸ்திரேலியாவையும் தமது ரட்சகர்களாக நம்பி ஏமாறும் சூழ் நிலையும் உண்டாகியுள்ளது.

இது போன்ற நிகழ்வுகள் ஏற்கனவே கோசோவோவின் சில காட்சி வித்தியாசங்களுடன் நடந்துள்ளது. அது மட்டுமில்லாமல் சோவியத் யூனியனின் சரிவை அடுத்தே தெற்கு ஆபிரிக்க நாடுகளின் விடுதலையில் அமெரிக்கா பெரும் அக்கறை காட்டியதும் நினைவில் இருத்தத்தக்கது.

இந்தப் பின்னணியில் கிழக்குத் திமோரின் விடுதலை இயக்கத் தலைவர் குஸ்மாவோவின் அண்மைக்காலப் போக்கு கவலை தருவதாக உள்ளது. அவர் அவுஸ்திரேலியப் படைகளின் பாதுகாப்புடன் கிழக்குத்திமோரின் தலைநகரான டிலியில் வந்திறங்கியது முதல் அமெரிக்க அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை வேண்டி நிற்பது வரை கிழக்குத் திமோரின் எதிர்காலம் அதை ஏகாதிபத்திய வாதிகளது கண்காணிப்புத் தளமாக மாற்றும் அபாயத்தையே சுட்டிக் காட்டுகின்றன.

சுகார்த்தோவின் அரசாங்கம் கிழக்குத் திமோரை அமெரிக்க ஆசியுடனேயே ஆக்கிரமித்து அமெரிக்க ஆதரவுடனேயே தன் ஆதிக்கத்தில் வைத்திருந்தது. இதைக் கிழக்குத் திமோர் மக்கள் மறந்து விடக்கூடாது.

அவுஸ்திரேலியா பப்புவா நியூகினியிலும் கிழக்குத் திமோரிலும் காட்டும் அக்கறை அவுஸ்திரேலிய மூலதனத்தின் சுரண்டல் நோக்கங்களை மையமாகக் கொண்ட ஒன்றே ஒழிய வேறில்லை. எனவேதான் அவுஸ்திரேலியப் படைகள் கிழக்கு திமோரின் விடுதலையை உத்தரவாதப்படுத்த மட்டுமன்றிப் பின்பு கிழக்குத் திமோரின் மீதான அவுஸ்திரேலிய ஆதிக்கத்தை உறுதிபப்படுத்தவும் பயன்படும் என்பதை நாம் மிகுந்த கவலையுடனும் எச்சரிக்கையுடனும் கூற வேண்டியுள்ளது.

கிழக்குத் திமோரின் பாடங்கள் சில நம் மண்ணில் முன்பு நாம் கண்டவை. அவற்றிலிருந்து நாம் கற்க வேண்டிய தேவையையும் நாம் நினைவிலிருத்துவது பயனுள்ளது.

## தேசிய முதலாளி

5ம் பக்க தொடர்ச்சி...

ஆட்சியமைக்க முடியாதுள்ளனர். அதற்கு காரணம் தேசிய முதலாளித்துவ அரசியல் தலைமையின் செல்லுபடியாகும் தன்மை பற்றி இடதுசாரிகள் என்போர் மயக்கத்தில் இருப்பதுதான். தேசிய முதலாளித்துவ அரசியல் தலைமைத்துவத்துடன் கூட்டுச் சேர்ந்து அரசியல் அதிகாரத்தில் பங்கெடுப்பதில் இருந்த அக்கறையும் கவனமும் இடதுசாரி தலைமைத்துவமாக கட்டிவளர்க்கும் தேவையிலிருந்த போதும் அதில் அக்கறையும் கவனமும் செலுத்தப்படவில்லை. இன்று உலகமயமாதலையும், ஏகாதிபத்தியத் தையும் எதிர்த்து தேசிய பொருளாதாரத்தையும் தேசிய இனங்களின் ஐக்கியத்தையும் முன்னிறுத்துவது அவசியமாகும். இதனை யூ.என்.பியோ அன்றி பொதுசன ஐக்கிய முன்னணியோ முன்னெடுக்கப் போவதில்லை. ஆதலினால் இலங்கை மக்களின் பொது எதிரி யூ.என்.பி மட்டுமே என்பது இன்று செல்லுபடியாகாது. யூ.என்.பியும், பொதஜன ஐக்கிய முன்னணியும் பொது எதிரிகள். அவற்றுக்கு எதிரான எல்லாசக்திகளும் இடதுசாரிகள் தலைமையில் அணிதிரட்டப்பட வேண்டியது அவசியமாகிறது.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சியதிகாரம் எக்கட்சியிடமிருந்து எக்கட்சிக்கு மாறப்போகிறது என்பதைவிட அவற்றுக்கு எதிரான அரசியல் கருத்தியல் உருவாகுவதும் அதற்கான தலைமையை கட்டிவளர்ப்பதும் முக்கிய அரசியல் நிகழ்ச்சி நிரலாக இருக்க முடியும். அதற்கான நம்பிக்கையை தரக் கூடியதாக உடனடியாக தென்படுவது தோழர் வாசுதேவ தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி எனலாம். அது எதிர்காலத்தில் எப்படி விரிவடையும் எத்தகைய நேர்மையுடயதாகும் என்பதெல்லாம் தற்போதைக்கு எதிர்வு கூறமுடியாவிட்டாலும் யூ.என்.பிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் எதிரான உடனடி அரசியல் நடவடிக்கைக்கு குறைந்த குறியீடாக இருப்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

# இந்திய பி.ஜே.பி. ஆட்சி எவ்வழி செல்வார்கள்?

**- நமன் -**

அண்மையில் இடம் பெற்ற இந்திய பொதுத் தேர்தலில் இந்துத்துவ தேசியவாதக் கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் தலைமையில் 22 கூட்டணிக் கட்சிகள் இணைந்து அரசாங்கத்தை நிறுவி உள்ளனர். இத்தகைய கூட்டணியில் மாநிலக் கட்சிகள் பங்கு கொண்டிருப்பது இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு பரவலான ஒரு தளத்தை வழங்கி உள்ளதாகவும் சிலர் கருத்துத் கூறுகின்றனர். ஆனால் மாநிலக் கட்சிகள் இணைந்திருந்த போதிலும் அவற்றின் அழுத்தம் எந்தளவிற்கு பிரதான கட்சியான பி.ஜே.பியின் போக்கை மாற்றும் என்பது ஒரு கேள்வியாகும். அதாவது மாநிலக் கட்சிகள் தமது மாநில அதிகாரத்தைத் தக்கவைத்தக் கொள்வதற்கும் அல்லது மாநிலங்களில் தத்தமது செல்வாக்கை வளர்த்துக் கொள்வதற்கும் முயலுமே தவிர முழு இந்திய நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பொறுப்பை பாரதிய ஜனதா ஆட்சியிடமே ஒப்படைத்துள்ள சூழலே நிலவுகின்றது. மாநிலக் கட்சிகள் தத்தமது மாநிலங்களுக்கு சில சலுகைகளை வாங்கி அதனை ஒரு சாதனையாகக் காட்டிக் கொள்வார்கள். அதே வேளை வெவ்வேறு வழிகளில் தங்களையும் தம்மைச் சார்ந்தவர்களையும் சொத்து சுகம் முதலியவற்றைப் பெருக்கிக் கொள்வதற்குரிய சந்தர்ப்பமாகவும் பயன்படுத்திக் கொள்வார்கள். ஆனால் இந்திய மக்களின் வாழ்வு மாற்றம் எந்தத் திசையில் முன்னெடுக்கப்படும் என்பதே பிரதானமானதாகும்.

இந்தியா இன்று பல்வேறு பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நிலையில் காணப்படுகிறது. அதன் பிரதான பிரச்சினை தனது மொத்த சனத் தொகையில் ஏறத்தாள அரைப் பங்கினரான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அவலத்தைக் கொண்டுள்ளமையாகும். வேலை இன்மையும் வாழ்க்கைத் தரத்தின் தாழ்ந்த நிலையும் அடுத்த பிரச்சினையாகும். இருப்பிடம், சுகாதாரம், சுத்தமான நீர், மோசமாக சூழல் மாசடைந்துள்ளமை, கல்வியறிவின்மை போன்ற வளர்ந்து வரும் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. அடுத்து இந்தியா பல்வேறு தேசிய இனங்களையும் சிறுபான்மை சமூகங்களையும் கொண்ட நாடு என்பதுடன் நூற்றுக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படும் நடாகவும் உள்ளது. இத்தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமத்துவம் மறுக்கப்படும் சூழலில் ஏற்கனவே காஷ்மீர் உட்பட பல்வேறு மாநிலங்களில் போராட்டங்கள் வேகமாக வளர்ந்துள்ளன. அவற்றை அடக்குவதிலும் அழித்தொழிப்பதிலும் இந்திய ஆளும் வர்க்கங்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளன.

அதேவேளை இந்திய ஆளும் வர்க்கம் தொடர்ச்சியாக தன்னைச் சுற்றியுள்ள எல்லை நாடுகளுடன் மிகுந்த ஆதிக்க உணர்வுடனும் நோக்குடனும் முரண்பட்டு நடந்து வந்துள்ளது. இதனால் ஒவ்வொரு நாட்டுடனும் ஒவ்வொரு வகைப் பிரச்சினையைக் கொண்டுள்ளது. அவை தீர்க்கப்படுவதில் உள்ள பிரதான முட்டுக்கட்டை இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நிலைப்பாடேயாகும்.

மேலும் இன்றைய சூழலில் அமெரிக்கா இந்திய பி.ஜே.பி ஆட்சியுடன் மிகவும் நெருக்கமாகி நிற்கிறது. அதன் நோக்கம் பரந்த இந்தியச் சந்தையை தன்வயப்படுத்தி பல்தேசியக் கம்பனிகளின் சூறையாடலுக்கு தளம் தேடிக் கொடுப்பதாகும். இந்தியாவின் தேசிய பொருளாதாரத்தை தாராளப்படுத்தல் என்னும் பெயரில் தனியார் துறைகளின் கைகளுக்கு ஒப்படைக்க வழி தேடுவதாகும். அடிப்படையில் இந்தியாவின் பலத்தை சிதறடித்து அதனைப் பலவீனமாக்குவதன் மூலம் தனது உலக மேலாதிக்கத்திற்கு பலம் தேடுவதும் அதன் மூலோபாயமாகும். அத்தகைய அமெரிக்கா தற்போதைய பி.ஜே.பி ஆட்சியினருடன் மிகவும் நெருக்கமாகி தமது பழைய கூட்டாளியான பாகிஸ்தானை கைவிட்டு இந்தியாவின் பக்கத்தில் நிற்கின்றது.

மேற்கூறியவை யாவும் இந்தியா எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளாகும். இவற்றுக்கு இந்துத்துவ சாதிய வெறி கொண்ட பி.ஜே.பி. எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றது. நிச்சயம் இக்கூட்டணி அரசு மக்கள் விரோத நிலைப்பாட்டையே முன்பு போன்று தொடர்ந்தும் முன்னெடுக்கும். அது இந்திய மக்களின் எழுச்சிக்கும் போராட்டங்களுக்கும் வழி வகுக்கும். குறிப்பாக இந்திய மாநிலங்கள் சிலவற்றில் ஏற்கனவே மாக்சிச லெனினிசக் கட்சிகள் பல்வேறு விதமான போராட்டங்களை நடாத்தி வருகின்றனர். அவற்றில் சில ஆயுதம் தாங்கிய போராட்டங்களாகவும் இருந்து வருகின்றன. சுதந்திரம் கிடைத்து பாராளுமன்ற ஆட்சிமுறை நடைமுறைப்படுத்திய ஐம்பது ஆண்டுகளில் இந்திய மக்களின் வாழ்வு மாற்றம் பெறவில்லை. முதலாளித்துவ நிலவுடமை சக்திகளே வாழ்வும் வளமும் பெற்று வந்துள்ளன. இந்நிலையில் அடுத்து நூற்றாண்டில் இந்தியா வெடித்தெழப் போகும் வெகுஜனப் புரட்சிகரப் போராட்டங்களின் பூமி ஆகுவதைத் தவிர வேறு வழியே கிடையாது. இனமத மொழி பிரதேச அடிப்படையில் போராட்டங்கள் இந்திய மண்ணில் வளர்வதையே ஏகாதிபத்திய சக்திகள் விரும்பும். ஆனால் உண்மையான சமூக மாற்றத்தையும் விடுதலையையும் முன்னெடுக்கக் கூடிய மாக்கிச லெனினிச சக்திகளின் ஒன்றுபட்ட தலைமைத்துவமே இந்தியாவிற்கு தேவைப்படுகிறது.

# இந்தோனீசிய ஜனநாயகம்

பல தில்லுமுல்லுகளை மீறி இந்தோனீசியாவில் சுகர்னோபுத்ரி மேகவதியின் தலைமையிலான ஜனநாயகக் கட்சி அதிகப்படியான பாராளுமன்ற இடங்களை வென்றது. எனினும் ராணுவத்திற்குப் பாராளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களைப் பாவித்து பழைய ஆளுங்கட்சியின் தலைமை ஒரு முஸ்லிம் மதவாதியை ஜனாதிபதியாக்கினர். இது பொதுமக்களின் கோபத்தைக் கிளறியதன் விளைவாக மேகவதி உதவி ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். இதன் மூலம் இந்தோனீசியாவில் ஜனநாயகம் காப்பாற்றப்பட்டுவிட்டதாக மேலை நாட்டு ஏடுகள் பிரசாரம் செய்கின்றன. எனினும் உண்மை என்ன?

இந்தோனீசிய ராணுவமும் பொலிஸூம் இன்னமும் நாட்டின் முக்கிய ஆதிக்க சக்தியாக உள்ளன. முன்னாள் ராணுவ சர்வாதிகாரி சுகார்த்தோ ஊழல் மூலம் திரட்டிய பல நூறு கோடி டொலர் பணம் பற்றிய விசாரணைகள் மெல்லக் கைவிடப்பட்டுவிட்டன. புதிய ஆட்சியால் இது பற்றி எதுவும் செய்ய முடியுமா?

இந்தோனீசிய மக்களின் தேவைகளை இந்தப் பாராளுமன்றத்தால் நிறைவு செய்ய முடியுமா? பிலிப்பினிய அனுபவத்தை வைத்து நோக்கும் போது இந்தோனீசிய நிலைமை மாறுவதானால் ஒரு பாரிய சமூகமாற்றம் இல்லாமல் எதுவும் இயலாது. பிலிப்பின்ஸில் இன்னமும் மாக்கோஸ் காலத்து அதிகார வர்க்கமே ஆட்சி செலுத்துகிறது போல சுகர்த்தோ ஆட்சி உருவாக்கிய அதிகாரக் கும்பலின் ஆட்சி தொடர்வதைப் பாராளுமன்ற ஆட்சிமுறையால் தடுக்க முடியாது.



ஜனநாயக இடதுசாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் வாசுதேவ நாணயக்காரா ராகலை நகரில் உரையாற்றுகிறார். அருகில் புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ. தம்பையா நிற்கின்றார். தலவாக்கல்லை பஸ் நிலையப் பொதுக் கூட்டத்தில் திரண்டிருந்த மக்களில் ஒரு பகுதியினர்.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

PUTHIYA POOMI පුදිය පූමි

சுற்று 06 டிசம்பர் 1999 பக்கம் 8 விலை ரூபா 10/= சுழற்சி 32


## மூன்றாம் உலக நாடுகளில் சிறுவர் நிலை

மூன்றாம் உலக நாடுகளில் 25 கோடி சிறுவர்கள் குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர். இவர்கள் 5 வயது முதல் 14 வயதினை உடையவர்கள். இவர்களில் 61வீதத்தினர் ஆசியாவிலும் 32வீதத்தினர் ஆபிரிக்காவிலும் ஏனையோர் லத்தீன் அமெரிக்காவிலும் காணப்படுகின்றனர். ஆசியப் பிராந்தியத்தில் இச் சிறுவர்களில் 10 லட்சம் பேர் பாலியல் தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்த அவல நிலையைப் போக்க முதலாளித்துவத்தால் முடியுமா? இல்லவே இல்லை.

# வடக்கில் யுத்தம் நிறுத்தப்படாதவரை

## காணமல் போவதை எவராலும் தடுக்கமுடியாது.

அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொலைக் கொரூரத்தின் அடையாளம் தெற்கில் சூரியகந்தவாக இருந்தது. இன்று பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியின் கொலைக் கொரூரச் சின்னமாக விளங்குவது செம்மணி. அன்று தெற்கே கதிர்காம அழகு ராணியில் தொடங்கிய பெண்வதை இன்று வரை கிரிஷாந்தி கோணேஸ்வரி கமலிட்டா என்று தொடர்கிறது. முடிவற்ற கொலைகளை இரண்டு ஆட்சிகளும் தொடர்கின்றன.

1996–97 காலப் பகுதியில் குடா நாட்டில் ராணுவக் கட்டுப் பாட்டின் கீழ் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை அறுநூறு பேருக்கு மேல். இவர்களைக் கண்டு பிடித்துத் தருமாறு பெற்றோரும் மனைவிமாரும் உறவினர்களும் தொடர்ந்து அழுகைக் குரல் எழுப்பி வந்துள்ளனர். செம்மணிப் புதைக்குழிகளில் 15 பேரது எலும்புக் கூடுகள் மட்டுமே கிடைத்துள்ளது. மிகுதிப் பேரது நிலை என்ன? பரந்த செம்மணிப் பகுதியில் எங்கெங்கே புதைகுழிகள் இருக்கும் என்பதை யார் அறிவார்கள். கிரிஷாந்தி கொலை வழக்கில் தீர்ப்ப வழங்கப்பட்ட ராணுவ வீரர்களது மனட்சாட்சி காரணமான அடையாளம் காட்டுதலினாலேயே செம்மணிப் புதை குழி பற்றி இந்தளவாவது வெளி உலகத்திற்கு தெரிய வந்தது.

ஆனால் மிகுதியான காணமல் போனோரின் கதி என்ன? அண்மையில் பாதுகாப்பு அமைச்சு காணாமல் போனோரின் பெற்றோர் மனைவிமார் உறவினர்களுக்கு உத்தியோக பூர்வமாக கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது. அதில் 355 பேரைக் குறிப்பிட்டு அவர்களைத் தம்மால் தேடிக் கண்டு பிடித்துத் தர முடியவில்லை எனத் தெரிவித்துள்ளது. இக் கடிதங்கள் கிடைத்ததும் குடா நாட்டின் பல வீடுகளில் அழுகை ஒலங்கள் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு கேட்டன.

அரசின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து காணாமல் போனோர்களின் பெற்றோர் மனைவிமார் குழந்தைகள் உறிவினர்கள் யாழ் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகம் முன்பாக ஒரு நாள் கண்டன உண்ணா விரதம் நடாத்தினர். தமது உள்ளக் குமுறல்களை அங்கு வெளிப் படுத்தினர். ஆனால் ஆட்சியின் காதுகளுக் இவை எல்லாம் ஏறப் போவதில்லை. இந்த அரசாங்கம் மட்டுமின்றி முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கூட அன்றைய காணாமல் போன பல்லாயிரம் பேருக்கு இதுவரை பதில் கூறவே இல்லை.

இந்த நிலையிலே தான் தமிழ்க் கட்சிகள் பொதுசன முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பிடித்துக் கொடுப்பதற்கு முன் நிற்கிறார்கள். வடக்கு கிழக்கில் எங்கும் அழுகுரல்கள் கேட்ட வண்ணமே இருக்கின்றன. ஆனால் அவை பற்றித் தமிழ்க் கட்சிகள் என்பன வற்றுக்கோ அவற்றின் அரசாங்க ஆரதவு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ அக்கறை கிடையாது. ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் அடிமை சேவகம் செய்வது போன்று நடந்து கொள்வதில் மட்டும் தமக்கிடையே போட்டி போட்டு நிற்கின்றன. இவர்கள் இவ்வாறு பேரினவாத முதலாளித்துவக் கட்சிகளின் பின்னால் நிற்பது தமது சுய நலத் திற்கும் சொந்த லாபங்களுக்கு மேயாகும்.

அதேவேளை வடக்கு கிழக்கில் கைதும் காணாமல் போவதும் இடம் பெறவே செய்கிறது. யுத்தம் நிறுத்தப்படாத வரை ராணுவம் முகாம்களுக்குள் இருத்தப்படாத வரை இனப்பிரச்சினைக்கு நியாயமான நியாயமான தீர்வு தேடப்படாதவரை இந்த அவலநிலை நீடிக்கவே போகிறது. தற்போதைய ஜனாதிபதி மீண்டும் ஜனாதிபதியாவதாலோ அன்றி அந்த இடத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு செய்யப்படுவதாலோ காணமல் போவது நிற்கப் போவதில்லை. தேர்தல் கால வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்படுவதற்கு அதிக நாட்கள் இரண்டு பெரும் கட்சிகளுக்கும் தேவைப்பட மாட்டாது. மக்கள் தான் மாற்று வழியாக மூன்றாவது பாதையைத் தேடுதல் வேண்டும்.

# சந்திரசேகரனின் அரசியல் குத்துக்கரணம்

## யூ.என்.பி மலையக மக்களுக்கு என்ன செய்யும்

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். அத்துடன் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இருந்த உறவை அறுக்கும் வகையில் அவர் வகித்துவந்த பிரதியமைச்சர் பதவியை இராஜிநாமாச் செய்தும் விட்டார்.

அவருக்கும் அவரது கட்சிக்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்து முகமாகவே அவர் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இருந்து வருவதாக தமிழ் பத்திரிகையொன்றிற்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டிருந்தார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு முன்வந்துள்ள காரணங்களும் அவரையும், அவரது கட்சியையும் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்பதையே எடுத்துக்காட்டுகிறது. அதாவது அவரது எதிர்கால அரசியல் அந்தஸ்திற்கு உறுதியான உத்தரவாதம் இருக்க வேண்டும் என்பது அவரின் விருப்பமாகும். மலையக மக்கள் முன்னணி முன்வைத்த கோரிக்கைகளுக்கு அரசியல் ரீதியான பொறுப்புமிக்க பதிலை ஐ.தே.கட்சி தந்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மலையக மக்களின் பிரதிநிதியாகவன்றி அவரின் கட்சியின் தலைவர் என்ற ரீதியிலேயே ஐ.தே.கட்சிக்கு ஆதரவளிக்க முடிவெடுத்துள்ளார் என்பது வெளிப்படுகிறது.

அவரது கோரிக்கைகளை பொதுஜன ஐக்கிய முன்னணி நிறைவேற்றவில்லை என்றும் குறிப்பாக நாட்டில் சமாதானத்தை நிலை நாட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்வாறு குற்றம் சாட்டுபவர் அரசாங்கத்துடன் ஒரு வித அபிப்பிராய பேதமுமில்லாத ஒருவராக கடந்த ஐந்து வருடங்களாக இருந்து வந்தார் என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். யுத்த நடவடிக்கைகளையும், கைது போன்ற நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தும் அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீது தொடர்ச்சியாக அரசாங்கத்துடன் இணைந்து வாக்களித்துள்ளார். இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் முடிவடையவுள்ள காலத்திலேயே அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுகிறார். அது அவரின் 'அரசியல் குருவான' காலஞ்சென்ற தொண்டமானிடமிருந்து கற்றுக்கொண்ட அரசியல் வித்தையாகும்.

அரசாங்கத்தை விமர்சிக்கும் அவர் அதைவிட மோசமான நிலைப்பாட்டை கொண்ட ஐ.தே.கட்சியை ஆதரிப்பது என்ற முடிவு மலையக மக்களின் நலன் சார்ந்த முடிவாகாது. அவரின் சொந்த இருப்பிற்கான முடிவாக மட்டுமே இருக்க முடியும்.

தோட்ட லயன்களுக்கு உறுதி தருவதாகக் கூறி 'வெறும் கடதாசியை' கொடுத்து மலையக மக்களை ஏமாற்றியவர்தான் ரணில் விக்கிரமசிங்கா. சந்திரசேகரன் கைதுசெய்யப்பட்டபோது அவசரகால சட்டப்பிரேரணை மீது ரணில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை சந்திரசேகரன் மீட்டுப்பார்ப்பது நல்லது. மலையக இளைஞர்களை கைது செய்வது போன்ற துன்புறுத்தல்களுக்கு ஆரம்பமாகவே அவரது பேச்சு அமைந்தது. அதாவது மலையகத்தில் புலி வேட்டையாட வேண்டும் என்பதை அன்று ரணில் பிரகடனப்படுத்தியிருந்தார்.

ஐ.தே.கட்சியின் கொள்கையே ரணிலின் கொள்கையாக இருக்கிறதேயன்றி மலையக மக்கள் தொடர்பாக ரணிலுக்கு விஷேடமான கொள்கை எதுவுமில்லை. அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக மக்களின் அடிப்படை ஜீவாதார உரிமைகள் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. எனவே மலையக மக்கள் ரணிலை ஆதரிக்க வேண்டும் என்பதற்கு விஷேடமாக காரணங்கள் எதனையும் சந்திரசேகரத்தால் கூறமுடியாது.

அவரின் இந்த முடிவு அவரின் கட்சிகளுக்குள்ளும் அபிப்பிராய பேதங்களை ஏற்படுத்தியிருகிற தாகவே தெரிகிறது. அபிப்பிராய பேதம் கொண்டவர்கள் நல்ல முடிவையும், நடவடிக்கைகளையும் எடுப்பார்கள் என்று நம்பலாம்.

இவ்வாறான தங்களது பதவி, பட்டம், அந்தஸ்து என்பவற்றுக்காக மலையக மக்களை அடிமைகளாக்கும் அடிமை வியாபாரிகளை மலையக மக்கள் நிராகரித்தே தீர்வார்கள். சுயநலத்திற்காக அரசியல் குத்துக்கரணங்களை அடிப்பவர்களுக்கு தகுந்த பாடங்களை மக்கள் கற்பிப்பார்கள்.

மலையக மக்களின் வாக்குகளை வைத்துக்கொண்டு தங்களது சுயநலத்துக்கு பேரம் பேசுபவர்களை மலையக மக்கள் தொடர்ந்து ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது உறுதி.

பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐ.தே.கட்சியும் இரண்டு பெரிய மக்கள் விரோத சக்திகள் அவற்றை நிராகரித்து அவற்றின் மீதான எதிர்ப்பை காட்டுவதற்காக மூன்றாவது பதீலிட்டு அரசியல் சக்தியாக தோன்றியுள்ள ஜனநாயக இடதுசாரி முன்னணியின் வேட்பாளரான தோழர் வாசுதேவ நாணயக்காரவிற்கு வாக்களிப்பதே சரியான முடிவாகும். அப்படி செய்வதன் மூலமே மலையக அரசியலும் நல்ல அடிப்படையை எற்படுத்த முடியும்.

# மடுத் தேவாலய மக்கள் மீதான தாக்குதல்

## கோளைத்தனமான பழிவாங்கலாகும்

யுத்தம் உச்ச நிலையை அடையும் போதும் தோல்விகள் இடம் பெறும் வேளைகளிலும் ஒன்று மறியாத சாதாரண மக்கள் மீது கொடூரமான தாக்குதல்கள் நடாத்தப்படுகிறது. அன்று வியட்நாம் யுத்தத்தில் மைலாய் படுகொலையைப் போன்று இன்று மடுத் தேவாலயப் படுகொலை போன்ற கொடூரக் கொலைகள் ஏற்கனவே பல தடவைகள் இடம் பெற்றிருக்கின்றன. பழிவாங்கும் நோக்கில் திட்டமிட்டு நடாத்தப்பட்ட இப்படுகொலைத் தாக்குதலைப் புதிய ஜனநாயக கட்சி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. அதேவேளை பக்க சார்பற்ற உயர் மட்ட விசர்ரணைக் குழு அமைக்கப்பட்டு சம்மந்தப்பட்ட மக்களும், மடுத் தேவாலயக் குருமார், நிர்வாகிகள் சுதந்திரமாகச் சாட்சியம் அளிக்கத்தக்க நடவடிக்கையை அரசாங்கம் உடன் செய்தல் வேண்டும்.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் தமது உயிர்களை பாதுகாக்துக் கொள்வதற்காக தஞ்சமடைந்திருந்த மக்களை நித்திரையில் வைத்து தாக்குதல் நடாத்தி கொன்றொழிக்கும் கொடூரம் இயலாத்தனத்தின் கோளைத்தனத்தின் வெளிப்பாடாகும். சிறுவர்கள் பெண்கள் உட்பட 42 பேர் வரை கொல்லப்பட்டும் 64 பேர்வரை காயமடைந்தும் உள்ளனர். ஈவிரக்கமற்ற இக் கொலைவெறித் தாக்குதலுக்கு அற்ப நிவாரண நிதி உதவியும், உதட்டளவு அனுதாபங்களும், உணவுச் சலுகைகளும் மட்டும் ஈடாக மாட்டாது. பக்க சார்பற்ற உயர்மட்ட விசாரணையும் உண்மைகள் கண்டறியப்பட்டு நீதி நிலை நாட்டப்பட்டு அதன் அடிப்படையில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உயர்ந்த பட்ச நிவாரணம் வழங்கப் படல் வேண்டும் என்பதை எமது கட்சி வற்புறுத்துகிறது.

வெளியிடுபவர்: இ. தம்பையா இல. 47. 3ம் மாடி. கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட். கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : யூ. கே. பிரின்டஸ். 26/1இ சிவனந்தா வீதி. கொழும்பு 13.